காப்பியக் கதைகள்

நான்காம் புத்தகம்

உதயணன்

புலவர் 'அரசு'

…நெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெ…
…, கீழத் தேர்த் தெரு, திருநெல்வேலி. & 1/140, பிராட்வே, சென்னை

கழக வெளியீடு :—௫௦௧

காப்பியக் கதைகள்

(நான்காம் புத்தகம்)

உதயணன்

புலவர் அரசு அவர்கள்

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை, 1.

First Edition : November, 1949

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1-140, BROADWAY :: MADRAS.

Head Office

24, EAST CAR STREET :: THIRUNELVELI.

அப்பர் அச்சகம், சென்னை - 1.

பதிப்புரை

மாணவர்களுக்குக் கதைகளில் விருப்பம் அதிகம். இனிய தமிழ்நடையில் அமைந்து விளங்கும் சுவையான கதைகள் அவர்கள் ஆவலை நிறைவேற்றுவதுடன் தமிழ் மொழியறிவையும் வளர்க்கின்றன.

தமிழ் மொழியிலுள்ள காப்பியங்கள் ஒவ்வொன்றும் சுவையான பல்வகை நயங்களும் நிறைந்தவை. அவற்றைக் கற்றுப் பயன்பெறவேண்டும் என்ற எண்ணம் இளமாணவர் உள்ளங்களில் முகிழ்க்கவேண்டும். முகிழ்ப்பின் பெரியவர்களாகுங் காலத்தில் தமிழ் மொழியில் நல்ல தேர்ச்சியும் ஆர்வமுங் கொண்டு விளங்க ஏதுவாகும். எனவே, காப்பியங்களில் பயின்றுவரும் கதைகளை இளமாணவர் விரும்பும் முறையில் எளிய இனிய தமிழ்நடையில் வெளியிட எண்ணினோம்.

திரு. புலவர் அரசு அவர்கள் மிகவும் சிறப்பான முறையில் அக்கதைகளை ஆக்கித்தந்துள்ளார்கள். கதைகளை விளக்கும் ஓவியங்களும் அங்கங்கே சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

இவ்வரிசையில் முன்னர் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி ஆகிய மூன்றும் வெளிவந்தன. இப்போது நான்காவதாக உதயணன் வெளிவருகின்றது.

மாணக்கர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களும் இந்நூலை நன்கு வரவேற்பார்கள் என நம்புகின்றோம்.

திருவள்ளுவர் ஆண்டு, ௧௯௮0, கார்த்திகை, 22-11-49. } சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

பொருளடக்கம்

காப்பியக் கதைகள்

4

உதயணன்



கோடபதியின் இசைகேட்ட யானை வந்துநிற்றல்

[பக்கம். 5]

உதயணன்

1. உதயணன் பிறப்பு

அழகிய வளங்கள் நிறைந்த நம் நாட்டில் வத்தவ நாடு என்று ஒரு நாடு இருந்தது. அதன் தலை நகரம் கௌசாம்பி. அந்த நாட்டரசன் சதானிகன். அவன் சேதி நாட்டரசனுன சேடகன் மகள் மிருகாவதி என்பவளை மணம்புரிந்து கொண்டான். சேதிநாட்டின் தலைநகர் வைசாலி.

சேதிநாட்டரசனுன சேடகன் அரசாட்சியிலே வெறுப்படைந்து, தன் மகனுன விக்கிரமனிடத்திலே ஒப்படைத்துவிட்டு, விபுல மென்னும் மலைக்குப் பக்கத்தி லுள்ள ஒரு ஆலங் காட்டிலே தவம்புரிந்து கொண் டிருந்தான். அவன் தவம் புரிந்து கொண் டிருந்த இடத் திற்குப் பக்கத்தில், பிரம சுந்தர முனிவர் என்பவர் தம் மனைவி பரமசுந்தரியுடன் தவம் புரிந்து கொண்டிருந் தார்.

ஒருநாள் இரவு முழுமதி அழகாக ஒளி வீசிக் கொண்டிருந்தது. சதானிகன் மனைவி மிருகாவதி அந்த அழகிலே ஈடுபட்டுத் தன் அரண்மனையின் மேல்மாடி யிலே படுத்துக்கொண் டிருந்தாள். அப்போது அவள் பூரண கருப்பவதி. சிவந்த படுக்கையிலே சிவந்த ஆடை யணிந்து படுத்திருந்தாள். அக்காலத்திலே சரபம் என்ற பெரிய பறவை அவ்வழியே பறந்து வந்தது. இவ்வளையும்

இவள் படுக்கையையும் சிவந்த ஊன் தொகுதி என்று நினைத்து, அப்படியே தன் கால்விரல்களால் எடுத்துக் கொண்டுபோயிற்று! அது எவ்வளவு பெரிய பறவையாக இருக்குமென்று நீங்களே நினைத்துப்பாருங்கள்.

அந்தப் பறவை விபுலம் என்னும் மலைக்குப் பக்கத்திலே ஆலங்காட்டிலே அவளைக் கொண்டுபோய் வைத்தது. அப்போதுதான் பொழுது விடிந்தது. பறவையும் அவள் உயிருள்ள பெண்ணாக இருப்பதை அறிந்து ஒன்றுஞ் செய்யாமல் விட்டுவிட்டுப் பறந்து போய்விட்டது. அவளும் விழித்துக்கொண்டாள். தான் அரண்மனையிலில்லாமல் வேறிடத்தில் இருப்பதை அறிந்து திகைத்தாள்; அச்ச முற்றாள்; அழுதாள். அப்போது தான் அவளுக்கு ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது. குழந்தையைப் பார்த்துச் சிறிது மகிழ்ந்தாள். என்றாலும், தன்னுடைய ஆதரவில்லாத நிலைக்கு வருந்தினாள்.

இவள் வருந்திக் கொண்டிருக்கும்போது அவ்வழியே குளிக்கப்போன சேடக முனிவர் பார்த்துவிட்டார். அவள் தம் மகள் என்று அறிந்து வியப்படைந்தார்; அவளை அன்புடன் ஆதரித்து அழைத்துச் சென்றார். தமக்குப் பெண்துணையில்லாமையால் தம் மகளை ஆதரிக்கும்படிப் பிரமசுந்தரமுனிவரைக் கேட்டுக் கொண்டார். ஆகவே, பிரமசுந்தரமுனிவரின் மனைவி பரமசுந்தரி மிருகாவதியை அழைத்துச்சென்று பாதுகாத்துவந்தாள்.

அக்குழந்தை கதிரவன் உதயத்திலே பிறந்ததால் அவனுக்கு உதயணன் என்று பெயர் வைத்தார்கள். இவன் வந்த பிறகு பரமசுந்தரியும் ஓராண் குழந்தையைப் பெற்றாள். அவனுக்கு யூகி என்பது பெயர்.

சேடக முனிவர் அரசராயிருந்தவர். பிரமசுந்தரமுனிவர் எல்லாக் கலைகளையும் அறிந்தவர். ஆகையால், உதயண னும் யூகியும் நன்ருக வளர்ந்து அரசர்க்குரிய எல்லாக் கலைகளையும் தங்கள் பெற்ருேரிடமே கற்று வந்தனர்.

பிரமசுந்தரமுனிவரிடம் கோடபதி என்னும் யாழ் ஒன்றிருந்தது. அது இந்திரனுல் அவருக்குக் கொடுக்கப் பட்டது. அதை இசைத்தால் எல்லாக் காட்டு மிருகங் களும் தம் கொடுமையை மறந்து வசமாகி விடும். உதய ணன் நன்ருகப் பாடக்கூடியவன். ஆகையால், அவனி டம் யாழைக் கொடுத்து இசைப்பயிற்சியும் செய்வித் தார். மேலும் யானையின் கோபத்தை அடக்கி வசப் படுத்துவதற்குரிய மந்திரம் ஒன்றையும் சொல்லிக் கொடுத்தார். அவர் மகன் யூகியையும் அவனிடம் ஒப் படைத்தார். இரு நண்பர்களும் உயிரொன்றும் உட லிரண்டுமாகப் பழகிவிட்டனர்.

ஒருநாள் உதயணன் கோடபதியை எடுத்து வாசித் துக் கொண்டிருக்கும்போது தெய்வத்தன்மை பொருந் திய யானை ஒன்று அருகில் வந்து இசையில் ஈடுபட்டு நின்றது. அதை அவன் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டான். ஒருநாளிரவு கனவில் அந்த யானை அவ னிடம் "என்மேற் பாகரை யேற்றக்கூடாது; தோல் கயிற்ருற் கட்டக்கூடாது; எனக்கு உணவளிக்காமல் நீ உண்ணக் கூடாது. இம் மூன்றில் எது நேர்ந்தாலும் நான் உன்னைவிட்டு நீங்கிவிடுவேன்." என்றது. அவ னும் அவ்வாறே எச்சரிக்கையாக இருந்துவந்தான்.

2. உதயணன் ஆட்சி பெற்றது

உதயணன் தக்க வயதுடையவனாக ஆகும் வரைக்கும் சேடக முனிவர் சதானிகனுக்கு மிருகாவதியைப் பற்றியும் உதயணனைப்பற்றியும் அறிவிக்கவில்லை. அவனை உயர்நிலைக்குக் கொண்டுவரவே அவ்வாறு வைத்திருந்தார். ஆனால், சதானிகன் மட்டும் தேடிக் கொண்டேயிருந்தான்.

இவ்வாறிருக்கும்போது, உதயணன் மாமனாகிய விக்கிரமனுக்கு அரசாட்சியில் வெறுப்புண்டாயிற்று. ஆகையால், அவன் தன் தந்தையிடம்வந்து அதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். அரசாட்சிக்குத் தக்கவரில்லையென்று அவன் வருந்துவதைச் சேடகர் அறிந்து உதயணனையும் யூகியையும் அனுப்பினார். மிருகாவதியுடன் அவர்களை அழைத்துச் சென்ற விக்கிரமன் உதயணனிடம் ஆட்சியை ஒப்படைத்தான். தெய்வ யானையும் உதயணனுடன் சென்றது.

வைசாலி நகரத்தில் உதயணன் யூகியை அமைச்சனாகக்கொண்டு அரசாட்சி செய்வதையும் அவன் தன் மகனென்பதையும் மிருகாவதி அங்கேயிருப்பதையும் கௌசாம்பியிலுள்ள சதானிகன் கேள்விப்பட்டான். பெருமகிழ்ச்சியுடன் வைசாலிக்கு வந்தான். மிருகாவதியைக் கண்டு களித்தான். அவள்மூலம் உதயணனைக்கண்டு தழுவி மகிழ்ந்தான். உதயணனும் தன் தந்தையை வணங்கிப் பேரின்பமுற்றான். நெடுநாளாகப் பிரிந்திருந்த அவர்கள் ஒன்றுகூடினால் எவ்வளவு மகிழ்ச்சியடைவார்களென்பதை நீங்களே நினைத்துப் பாருங்கள்.

சதானிகன் உதயணனை வைசாலியிலேயே ஆண்டு வரக் கூறிவிட்டு, மிருகாவதியை மட்டும் அழைத்துச் சென்றான். பிறகு, அவர்களுக்குப் பிங்கலன், கடகன் என்று இரு மக்கள் பிறந்தனர். உதயணன் அடிக்கடிக் கௌசாம்பிக்கு வந்து போவான். சில ஆண்டுகள் கழிந்தபிறகு, உதயணனிடமே கௌசாம்பியையும் விட்டுவிட்டுச் சதானிகன் தவம் புரியச்சென்றான். ஆகவே, வைசாலிநகரை யூகியிடம் ஒப்பித்துவிட்டு உதயணன் கௌசாம்பிநகருக்குவந்து விட்டான். அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர்களான வயந்தகன், இடவகன், உருமண்ணுவா என்று மூன்று அமைச்சர்கள் உதயணனுக்குக் கிடைத்தார்கள். கல்வியாலும் வீரத்தாலும் அரசாட்சியாலும் உதயணன் எல்லா அரசர்களினும் உயர்வடைந்தான்.

3. உஞ்சையில் உதயணன்

அவந்தி என்னும் நாட்டில் உச்சயினி நகரத்தில், வீரத்திற் சிறந்த பிரச்சோதனன் என்ற சக்கரவர்த்தி செங்கோல் செலுத்திவந்தான். வத்தவநாடும் சேதிநாடும் அவனுக்குக் கப்பம் கட்டவேண்டிய நாடுகள். பிரச்சோதன சக்கரவர்த்திக்கு வாசவதத்தை என்னும் பெண்ணொருத்தி யிருந்தாள். வாசவதத்தையின் அன்னை பதுமகாரிகை. வாசவன் என்று இந்திரனுக்குப் பெயர் உண்டு. வாசவன் அருளாலே பிறந்ததனால் வாசவதத்தையென்று பெயரிட்டார்கள். பாலகன், பாலகுமரன், கோபாலகன் என்போர் பிரச்சோதனன் மக்களிற் சிறந்தவர்கள். சாலங்காயன் என்பவன் அமைச்சரிற் சிறந்தவன். பிரச்சோதனனுடைய பட்டத்துயானையின் பெயர் நளகிரி.

ஒருநாள், அமைச்சர்களை எல்லா அரசர்களும் கப்பம் செலுத்தி வருகிறார்களா என்று சக்கரவர்த்தி வினவினான். வத்தவநாட் டரசனும் சேதிநாட் டரசனும் கப்பம் செலுத்த வில்லையென்று அவர்கள் கூறினார்கள். ஆகவே, அவர்களைத் தண்டிக்க என்ன வழியென்று ஆராய்ந்தார்கள்.

அப்போது சாலங்காயன் கூறியதாவது:

"உதயணனுக்குத் தெய்வயானையொன்றும் வல்லமை மிக்க அமைச்சர்களும் இருக்கின்றனர். சேதிநாட்டிலிருக்கும் யூகியும் உதயணன் நண்பன்; பெருவீரன்; சூழ்ச்சியிலே சிறந்தவன். ஆகவே, அவர்களை நேர்முறையிலே போர்செய்து வெல்லமுடியாது. ஆனால், உதயணனிடமிருந்த தெய்வயானை இப்போது பிரிந்திருக்கிறது. அவன் அதற்கு உணவளிக்குமுன்

ஒருநாள் உண்டுவிட்டான். அதனுற் பிரிந்து விட்டது. அவன் அதைத்தேடிக்கொண்டு காட்டிலே ஏக்கத்துடன் அலைகிருன். தனியே அலையும்போதே அவனைச் சிறைப்படுத்த ஒரே வழிதான் உண்டு. பிரிந்து போன அவன் யானையைப்போல இயந்திரயானை ஒன்றைச் செய்து, யானையின் உள்ளே போர்வீரர்களை இருத்திக் கொண்டுபோய் அக்காட்டில் உலாவச்செய்ய வேண்டும். அவன் அருகில் வரும்போது யானையினுள்ளிருப்போர் எளிதிலே சிறைப்படுத்தி விடலாம். மேலும், அவனுக்குத் துணையாக யூகி வரா வண்ணம் வைசாலியின்மேற் படையெடுத்துச் சென்று யூகியுடன் போர்செய்யவும் வேண்டும்.'' என்று கூறினான்.

அரசர்க்கரசனுன பிரச்சோதனன் அதற்கு இசைந்தான்; சிறந்த சிற்பிகளைக் கொண்டு இயந்திர யானையொன்றைச் செய்து முடித்தான். ஒருபடை யூகியுடன் போர்செய்ய வைசாலிக்குச் சென்றது. மற்ருெரு படை யானையுடன் சாலங்காயன் தலைமையிலே உதயணன் இருக்கும் காட்டிற்குச் சென்றது.

காட்டிற்குச் சென்றவுடன், சாலங்காயன் தன் சேனைகளுடன் புதர்களில் மறைந்துகொண்டு இயந்திர யானையைமட்டும் அனுப்பினான். அஃது உண்மை யானையைப்போலவே, பிளிறிக்கொண்டு சென்றது. உதயணன் அதைக்கண்டு மகிழ்ந்து கோடபதியை வாசித்துக்கொண்டே அருகிற் சென்ருன். உடனே, அந்தயானையின் வயிற்றிலிருந்த கதவு திறந்துகொண்டது; பல போர்வீரர்கள் வெளியே குதித்தார்கள்; உதயணனைச் சூழ்ந்துகொண்டார்கள். உதயணன் வியப்படைந்து வாளையுருவி அவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்தினான்.

திடீரென்று சாலங்காயன் தன் சேனைகளோடு உதயனனை வளைத்துக்கொண்டான். எனினும், உதயனன் அஞ்சாமல் அவர்களைத் தோல்வியுறச் செய்தான். சாலங்காயனும் தோற்றான். கடைசியில் ஒரு யானையோடு போர்செய்கையில் உதயனன் வாள் அதன் தந்தத்திற் பட்டு ஒடிந்தது. வெறுங்கையனாக நின்ற உதயனனைச் சாலங்காயன் சிறைப்படுத்தி உஞ்சைக்கு அழைத்துச்சென்றான்; அங்கே இருண்ட சிறைச்சாலையிலே காலில் விலங்கிட்டு அடைத்து வைத்தான்.

உதயனனைக் காட்டிலே சிறைப்படுத்தியபோது அவன் அமைச்சருள் ஒருவனான வயந்தகன் அங்கே வந்து சேர்ந்தான். அவனிடம் உதயனன் தன் நிலையை எழுதிக் கொடுத்து யூகியிடம் அளிக்கும்படி கூறிச் சென்றான். அவ்வாறே வயந்தகன் யூகியிடம் அத் திருமுகத்தைக் கொடுத்தான். அதைப் படித்த யூகி மிகுந்த கலக்கமடைந்தான். பிறகு சினத்துடன் நண்பர்களைப் பார்த்து, "கள்ள யானையால் நம் அரசனை மயக்கிச் சிறைப்படுத்தியவன் நகரத்தை யான் ஒரு யானையாலேயே அழித்து, உதயனனை மீட்பேன். மேலும், அந்தப் பிரச்சோதனன் நகரத்தைத் தீக்கிரையாக்குவேன்; வாசவதத்தையைப் பிரித்துக்கொண்டுவந்து அவனறியாமலே உதயனனுக்கு மணம் முடிப்பன்" என்று சபதம் புரிந்தான்.

பிறகு, வைசாலிநகரைத் தன் சுற்றத்தானொருவனைப் பாதுகாத்து வரும்படி செய்தான். கௌசாம்பியை உதயனன் உடன்பிறந்தவர்களான பிங்கலனையும், கடகனையும் ஆளச் செய்தான். அவந்தியின் எல்லையிலுள்ள புட்பக நகரத்தில் உதயனன் உற

வினன் ஒருவனை இருத்தினான். இடவகனை அடிக்கடி அங்கங்கே வேண்டுவனவற்றைச் செய்ய அமைத்தான். எல்லாவற்றையும் ஒழுங்குசெய்த பிறகு, 'உதயணன் பிரிவைத் தாங்காமல் யூகி இறந்தான்' என்ற செய்தியை எல்லா நாட்டினரும் அறியும் வண்ணம் பரப்பினான். மேலும், ஒருவன் பிணத்தைத் தன் பிணம் என்று பிறர் நினைக்கும்படி தன் ஆடை அணிகளை அப்பிணத்திற்கிட்டு அதைச் சுட ஏற்பாடு பண்ணினான். உலகம் நம்பியது. பிரச்சோதனன் யூகி இறந்தானென்று மகிழ்ந்தான்.

இந்த ஏற்பாடுகளுக்குப் பின் யூகியும் அவன் நண்பர்களில் வயந்தகன் போன்றவர்களும் அன்புடைய பல வீரர்களும் மாறுவேடம் பூண்டு பிரச்சோதனன் நகரத்தை அடைந்தனர். அங்கே வயந்தகனும் மற்ற வீரர்களும் அரண்மனையிலும் அருகேயுள்ள மாளிகைகளிலும் வேலைக்காரர்களாக அமர்ந்தனர். யூகிக்கு அங்கே நடக்கும் புலன்களை அடிக்கடி வந்து அறிவித்தனர். யூகியோ உச்சயினிநகரின் வெளியிலுள்ள ஊரொன்றில் தனிவீட்டிலே தங்கினான்; தன்னைச் சார்ந்த வீரர்களுக்கும் தனக்கும் மட்டும் புரியும்படியான சில குறிப்பு மொழிகளையும் சொல்லிக்கொடுத்தான். வயந்தகன் அரண்மனையிலேயே தங்கி அரசகுமாரர்களுக்குத் தொண்டுசெய்து கல்வி கற்பவனாக அமர்ந்திருந்தான். மற்ற வீரர்கள் செவிடரைப் போலவும் ஊமைகளைப் போலவும் நடித்து வேலைசெய்தார்கள். அவ்வாறு நடந்துகொண்டதால் எளிதிலே உளவறிய முடிந்தது.

இவர்கள் இவ்வாறு முயற்சி செய்யும்போது, பாஞ்சாலதேசத்தரசனான ஆருணி யென்பவன் உத

யணன் சிறைப்பட்டதால் மனமகிழ்ந்து, சிறுபடையுடன் வந்து கௌசாம்பியைக் கைப்பற்றிக் கொண்டான். அவன் உதயணன்பகைவன். பிங்கலனும் கடகனும் தோல்வியடைந்து வேறிடஞ் சென்று மறைந்து வசித்தனர்.

உச்சயினிநகரில் உதயணனைக் காண யூகி ஒருவழி செய்தான். நோயாளியைப் போலவும் தெய்வங்கொண்டவன் போலவும் நீர்க்கரகமொன்றைத் தலையிலே வைத்துக்கொண்டு ஆடியும் பாடியும் நகரத்தின் தெருக்களிலே சென்றான். அவனைக் கண்டு பலர் வியப்புடன் கூடவே வந்தனர். யூகி, 'ஐந்தலை நாகம் ஒன்றை இந்நகரரசன் சிறையிலே வைத்திருக்கிறான். அச்சிறை எங்கே யுள்ளது?' என்று வினவிக்கொண்டே ஆடுவான். வேறு ஏதாவதும் வினவுவான். அவன் பேச்சுக்களுக்குத் தொடர்பேயிராது. இவ்வாறு உதயணன் இருக்கும் சிறைச்சாலையருகே வந்தான்; தனக்கும் உதயணனுக்கும் மட்டும்தெரிந்த பாட்டொன்றைப் பாடினான். ஆதலால், யூகி வந்திருப்பதை அறிந்த உதயணன், குழலின்மூலம் தான் இருப்பதை அறிவித்தான். மேலும், தன் சிறைச்சாலையின் மேல்மாடத்திலே வேடிக்கை பார்ப்பவன்போல் வந்து நின்றான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்து மகிழ்ந்தனர்.

இப்படிப் பலநாட்கள் ஒருவரையொருவர் பார்த்து வரும்போது சிறைக் காவலர்களில் ஒருவன் யூகியைப்பற்றி ஐயுற்றான். அவன் அரசனிடம் சென்று, 'யாரோ ஒருவன் நீர்க்கரகமொன்றைத்தூக்கிக் கொண்டு ஆடியும் பாடியும் ஒருநாள் போலவே பல

நாளும் நம் சிறைச்சாலையருகில்வந்து பாடுகிறுன். அதே நேரத்தில் உதயணனும் குழல் வாசிக்கிறுன்' என்றுன். சாலங்காயன் இதைக்கேட்டு, 'அரசே! இவன் கூறு வதை நோக்கின், அவ்வாறு வருவோன் யூகியாகவே இருக்கவேண்டும். அவன் இறந்திருக்க மாட்டான். அவன்மார்பில் ஒரு தழும்புஉண்டு. அதைக் குறிப் பாகப் பார்த்துவரக் கட்டளையிடுங்கள்' என்றுன். அரசனும் அவ்வாறே சிறைக்காவலனிடம் கூறினுன். இவர்கள் பேசிக்கொள்வதைச் செவிடர் போலவும் ஊமையர் போலவும் நடித்த யூகியின் ஒற்றர்கள், யூகி யிடம் அறிவித்தனர். யூகி பிறகு வெளிவரும் போதெல்லாம் மார்பை மறைத்து வந்தான்.


உதயணனைச் சிறைப்படுத்திய பொழுது யூகி சப தஞ் செய்தானல்லவா? அதைக் கொஞ்சங் கொஞ்ச மாக நிறைவேற்ற எண்ணங் கொண்டான். அதற்காக அரசன் பட்டத்து யானையான நளகிரியிடம் இரவிற் சென்று, ஒருவரும் அறியாமல் அகிற்புகையாலும் மந்திரத்தாலும் மருந்தாலும் கோபத்தையும் மத வெறி யையும் உண்டாக்கிவிட்டான். அது கட்டுத்தறியை முறித்துக்கொண்டு நகருக்குள் புகுந்து நாசஞ் செய்யத் தொடங்கியது. பாகர்களாலும் போர்வீரர்களாலும் அடக்க முடியவில்லை. எதிர்த்தவர்களை யெல்லாந் துதிக்கையால் வாரியடித்துக் கொன்றது.

அரசன் இதைக் கேள்வியுற்றுச் சாலங்காயனை வினவினுன். சாலங்காயன் நெடுநேரஞ் சிந்தித்து உத யணனை யன்றி வேறெவராலும் அடக்க முடியாதென் றுன். முதலில் அரசன், 'அவனை வஞ்சமாகச் சிறைப் படுத்தினேம். அதுவே இழிவு. இப்போது மதவெறி

கொண்ட யானையின் முன் அவனை விடுத்தாற் பழி வந்து சேரும்' என்று கூறி மறுத்துவிட்டான். ஆனால் சாலங்காயன், கோடபதியென்னும் யாழிசையினால் அதை வசப்படுத்திவிடுவான் என்று உறுதி கூறியதன் மேல் ஒப்புக்கொண்டான்.

பிறகு, சிவேதன் என்னும் மந்திரியை அனுப்பி உதயணனைச் சிறையினின்றும் விடுவித்து நளகிரியின் சினத்தை அடக்கிவரச் சொல்வித்தான். அவ்வாறே, உதயணன் யானையினிடம் சென்று முதலில் மந்திரத்தால் வசப்படுத்திப் பிறகு, கோடபதி யென்னும் யாழை இசைத்து அடக்கினான். அந்த யானை பசுப் போல அடங்கி நின்றது. உதயணன் அதன்மீது ஏறிக் கொண்டு தெருவழியே சென்றான். நகர மக்களெல்லோரும் அவனைப் புகழ்ந்து வாழ்த்தினார்கள். உதயணன் யானையை அரண்மனையருகில் செலுத்திக் கொண்டு வரும்போது, அரண்மனையிலுள்ள பெண்களெல்லாரும் மேல்மாடியிலிருந்து பார்த்தார்கள். வாசவதத்தையும் பார்த்தாள். அவளை உதயணனும் பார்த்தான். இருவரும் காதல் கொண்டனர். அரண்மனையை அடைந்தவுடன் பிரச்சோதனன் மிகுந்த மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டு அழைத்துத் தக்க ஆசனத்தில் இருத்தித் தானும் அமர்ந்தான்.

பிறகு, அன்புடன், 'நீ தூய்மையானவன்; நற்குலத்திற் பிறந்தவன்; வலிமையுடையவன்; மந்திரங்களை அறிந்தவன். உன் நிலையை அறியாமல் உனக்குத் துன்பம் விளைவித்தேன். பொறுக்க வேண்டும்' என்று இன்மொழிகள் கூறினான்; விலையுயர்ந்த ஆரம் ஒன்றை அணிவித்தான். அவனுடைய கல்வியறிவைக் கண்டு வியப்படைந்தான். தன் மக்களை அவனிடம்



நளபதியை அடக்கி அதன்மேலேறி வரும் உதயணனை
அரண்மனை மேல்மாடியிலிருந்து வாசவதத்தை காணல்

[பக்கம். 14]

அழைத்துவந்து அவர்களுக்குக் கலைகளைப் பயிற்றும் படி வேண்டினன். விரைவில் அவனைக் கௌசாம் பிக்கு அனுப்புவதாகவும் அதுவரையில் அவர்களுக்குக் கலை பயிற்றுவதுடன் தன் மகள் வாசவதத்தைக்கு யாழ் கற்பிக்கும்படியும் கேட்டுக் கொண்டான். முத லிலே தன் பகைவனாக இருந்த பிரச்சோதனனின் அரண்மனையிலே தங்கியிருக்க மனம் ஒப்பாவிட்டாலும், வாசவதத்தையைக் காணலாமென்று நினைத்து ஒப்புக் கொண்டான். அரசன் மகிழ்ந்து யானைச் (குஞ்சர) சேரி யில் இருந்த அரண்மனையிலே அவனுக்கு வேண்டிய பொருள்களை அமைத்துத் தங்கியிருக்கச் செய்தான். உதயணன் முதலில் அந்த அரண்மனையிலே தன்னைக் கொல்ல ஏதாவது சதி யிருக்கிறதோ என்று அவநம் பிக்கை கொண்டான். பிறகு, பரிசோதனை செய்து பார்த்துக் கெடுதியில்லை யென்று அறிந்து தங்கியிருந் தான்.

நல்ல நாளிலே, அரசகுமாரர்களுக்கும் வாசவதத் தைக்கும் கலை கற்பிக்கத் தொடங்கினன். அரசகுமா ரர்கள் போர்க்கலையிலும் வாசவத்தை யாழ்க்கலையிலும் விரைவில் தேர்ச்சியடைந்து வந்தனர். உதயணனுக்கு வேண்டியவற்றை ஒவ்வொருநாளும் கொடுக்க அரச குமாரர்களிற் பாலகுமரன் நியமிக்கப் பட்டிருந்தான். உதயனன் தோழனான வயந்தகன் அரசகுமாரர்களுக்கு வேலைசெய்து கொண்டு கல்விகற்று வந்தானென்று முன்னமே அறிவோம். அந்த வயந்தகனைப் பாலகுமரன் ஒருநாள் அனுப்பினன். அவனை அடையாளந் தெரிந்து உதயணன் மகிழ்ந்தான். பிறகும், அவனை அனுப்பினாற் போதுமென்று பாலகுமரனுக்குச் சொல்லியும் அனுப் பினன். அவ்வாறே வயந்தகன் அன்று முதல் உதயண

னுக்குத் தொண்டுசெய்து வந்தான். அவன் மூலமாகப் பல வீரர்கள் அங்கங்கே அரண்மனையில் மாறு வேடத்துடன் வேலைசெய்து வருவதையும் யூகியின் முயற்சியையும் அறிந்து களிப்படைந்தான்.

வாசவதத்தைக்கு யாழ்ப்பயிற்சி நன்ருக வளர்ந்து வந்தது. அதனோடு இருவருடைய காதலும் வளர்ந்தது. வாசவதத்தையின் யாழ்ப்பயிற்சியை அறிந்த பல அரச குமாரர்கள் அவளை மணக்கவிரும்பினர். ஆகவே, காணிக்கைப் பொருள் பலவற்றை அனுப்பி வைத்தனர். பிரச்சோதனன் அவர்களுக்கு ஒன்றும் விடைகொடாமல் இருந்தான். இச் செய்தியைக் கேள்வியுற்ற வாசவதத்தை நடுங்கினுள். உதயணனை யன்றி வேறெவரையேனும் மணம்புரியத் தந்தை கட்டளையிடுவாரோ என்ற ஐயம் அவளுக்குண்டாயிற்று. அதனுல். உணவு, உடை, விளையாட்டு முதலானவற்றிலே கருத்தின்றி மெலிந்து கிடந்தாள். வாசவதத்தையைக் குழந்தைப் பருவத்திலிருந்து வளர்த்துவந்த சாங்கியத்தாய் என்பவள் அவளைத் தேற்றி உதயணனுக்கே அவளை மணம் முடிக்க முயற்சி செய்வதாகக் கூறினுள்; உதயணனுக்கும் இதனை அறிவித்தாள். அவனும் மகிழ்ந்தான்.

நல்ல நாளொன்றிலே அரசகுமாரர்களின் போர்ப் பயிற்சியைப் பல அரசர்களின் முன்னிலையிற்சோதித்துப் பிரச்சோதனன் வியப்பும் களிப்பும் அடைந்தான். அவ்வாறே வாசவதத்தை இசையில் வல்லவளாக இருப்பதைக்கண்டு மகிழ்ந்தான். தான் உதயணனுக்குச் செய்த தீமையைச் சிறிதும் மனங்கொள்ளாமல் தன் மக்களைக் கலையிலே சிறந்தவர்களாக ஆக்கியதை நினைத்தபோது அவனிடம் பெருமதிப்பும் அன்பும் உண்டாயின.

2

ஆகவே, அமைச்சர்களுடன் ஆராய்ச்சி செய்து உதயனன்நாட்டை ஆருணியைவென்று மீட்டுக் கொடுப்பது கடமையென முடிவுசெய்தான். மேலும், ஆருணியுடன் போர் செய்யப் புறப்படப் பாலகனுக்குக் கட்டளையிட்டான்.

அதற்குமுன் நீர்விழா ஒன்றை நடத்த முடிவு செய்து, நகர மக்களுக்கு முரசறைந்து அறிவித்தான் அரசன். நீர்விழா என்ருல் எல்லோருக்கும் விருப்ப முண்டு. ஆகையால், எல்லோரும் சிப்பிராந்தி என்னும் ஆற்றின் இருகரையிலும் கூடாரங்கள் அமைத்துக் கொண்டு சென்று தங்கினர். அரச குடும்பத்தாருக் கென்று அழகான கூடாரம் அமைக்கப்பட்டது. இருபத் தொருநாள் அந்தவிழா நடைபெறும். ஆகையால், அவ்வாறு தங்குதற்கேற்ற பொருள்களெல்லாம் கொண்டு போய்ச் சேர்த்தனர்.

உதயனனுக்குப் பத்திராபதி என்னும் பிடியொன்றை அரசன் கொடுத்து அதன் மேலேறி நீர்விழாவுக்குச் செல்ல வேண்டிக்கொண்டான். தானும் தன் பட்டத்து யானையான நளகிரியின் மேற் சென்ருன். வயந்தகன் உடன்வர உதயனன் அந்தப் பிடியின்மேல் ஊர்ந்து சென்று ஆற்றங்கரையில் தான் தங்குதற்குரிய இடத்தை யடைந்தான்.

வாசவதத்தையும் காஞ்சனமாலை முதலிய தோழி களுடன் முதலில் ஒரு வண்டியிலேறினள். அவ்வண்டி யிற்கட்டிய எருதுகள் அடியெடுத்து வைக்கும்போது குளம்புகள் வழுக்கினதை அறிந்து சகுனத்தடை யென்று, வண்டியிலிருந்து இறங்கிப் பல்லக்கில் ஏறிச் சென்ருள்.

நீராடுதற்குரிய நல்லநேரம் வந்தவுடன் கடவுள் வழிப்பாட்டையும் தானதர்மங்களையுஞ்செய்து கொண்டு நீராடத் தொடங்கினர். உதயணன் வெளியில் மகிழ்ச்சியுடன் காணப்பட்டாலும் உள்ளத்தில் மட்டும் பிரச்சோதனனுடைய செல்வமிகுதியையும், அவன் தன்னைச் சிறைப்படுத்தியதுடன் விடுதலை செய்து தன் நகர்க்கு அனுப்பமுடிவு செய்திருப்பதையும் தானே தன்னை விடுவித்துக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்காமற் போனதையும் எண்ணியெண்ணிக் கலங்கினான்.

ஆனால், யூகி மட்டும் பேசாமல் இருக்கவில்லை. வயந்தகன்மூலம் உதயணனுக்கு ஓர் ஓலையை அனுப்பினான். அதில், உதயணன் எச்சரிக்கப்படும்போது வாசவதத்தையைப் பத்திராபதியின் மேல் ஏற்றிக் கொண்டு கௌசாம்பியை நோக்கிச் செல்லவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தான். அதற்காகப் பல போர் வீரர்களை உதயணனுக்குக் காவலாக ஏற்படுத்தினான். பிரச்சோதனனுடைய படை வீரர்களைத் தடுக்கவும் ஆயிரக்கணக்கான வீரர்கள் அங்கங்கே யிருந்தனர். சில கள்ளப்பெண்களை நகர்க்குத் தீவைக்கும்படி அமர்த்தியிருந்தான்.

4. உதயணன் வாசவதத்தையுடன் மீளல்

யூகியின் குறிப்பை உணர்ந்த உதயணன் மகிழ்ந்து பத்திராபதியை வாசவதத்தை நீராடும் துறையின் பக்கமாகவே உலவவிட்டுச் சுற்றிக்கொண்டிருந்தான். இந்நிலையிலே மேகம் வானத்திலே நிறைந்தது. பெருங் காற்றுக் கிளம்பியது. காற்றும் மேகமும் நெருப்புப் பற்றத் துணையாக இருக்கும்போலத் தெரிந்ததால் யூகி கனவிலே கண்டபொருள் கையிற் கிடைத்ததைப் போல மகிழ்ந்தான்; குறிப்பிட்டிருந்தபடி ஒரு முரசத்தைக் கொட்டினான். அவ்வோசையைக் கேட்ட கள்ள மகளிர் நகருக்குத் தீவைத்தனர். நகர மக்களெல்லோரும் நகரத்திலே தீக்கொழுந்தும் புகையும் தோன்றுவதைக் கண்டு கலக்கமடைந்து அப்படியப்படியே ஓடினர்.

பிரச்சோதனனும் கலக்கமடைந்தான். வேலைக்காரர்களைக் கூப்பிட்டு, 'வாசவதத்தையைக் கெடுதியின்றிக் காப்பாற்றி அழைத்து வருவது உதயணன் கடமை' என்று உதயணனுக்குச் சொல்லியனுப்பினான். ஆகவே, உதயணனும் பத்திராபதியை வாசவதத்தையண்டை நடத்திச் சென்று அரசன் கட்டளையைக் கூறிக் காஞ்சனமாலையையும் வாசவதத்தையையும் ஏற்றிக் கொண்டு விரைந்து கௌசாம்பியை நோக்கிச் சென்றான்.

உதயணன் வாசவதத்தையை வேறொரு திசையிலே கவர்ந்து செல்வதைப் பிரச்சோதனன் படைவீரர் குறிப்பாக அறிந்து அவனைத் தடுக்க ஓடினர். இதை எதிர்ப்பார்த்திருந்த யூகியின் படைவீரர்கள், 'உதயணன் வாழ்க! யூகி வாழ்க!' என வாழ்த்திக்கொண்டு அவர்களை வெட்டி வீழ்த்தினர். யூகியும் வெளிப்

பட்டுத் தனக்குத் தவத்தாற் கிடைத்த வீரவாளை எடுத்துக் கொண்டு எதிர்ப்பட்ட பகைப்படைகளை அழித்துக் கொண்டே. உதயணனை அடைந்து, 'வெற்றியுண்டாகுக! விரைந்து செல்க!' என்று வாழ்த்தினான்.

உதயணன் சாங்கியத்தாயை அழைத்துக்கொண்டு வரவேண்டும் என்பதைக் குறிப்பிட்ட ஓலையொன்றை யூகியிடம் அளித்துவிட்டுத் தன்னாட்டை நோக்கிச் சென்றான். வயந்தகனும் அப்பிடியின் மேலேறி முன்னால் அமர்ந்து பிடியைச் செலுத்தினான். அப்போது அப்பிடியைக் காப்பவனாகிய வராகன் என்பவன் உதயணனைத் தடுக்கும் பொருட்டு அங்கே வந்தான். உதயணன் 'வராகனே! நீ சக்கரவர்த்தியிடஞ் சென்று, அவராணைப்படியே வாசவதத்தையைப் பாதுகாத்து என்னாட்டிற்குச் செல்லத் துணிந்தேன்' என்றும் அவருக்கு வணக்கந் தெரிவிப்பதாகவும் கூறுக, என்றான். வராகன் ஒன்றுஞ் சொல்லமுடியாமல் விரைந்து பிரச்சோதனன் தங்கியிருக்கும் இடத்திற்கு ஓடினான். நகரமாந்தரெல்லோரும் உதயணன் செயலால் என்ன கெடுதி நேரிடுமோ என்று நடுங்கினர்.

சோதிடன் ஒருவன் பிரச்சோதனனிடம், 'காற்றும் மேகமுங் கலந்த அந்த நிமித்தமானது ஊருக்கு முதலிலே துன்பத்தையும் பிறகு இன்பத்தையும் தரும்' என்று கூறிக் கொண்டிருந்தான். அப்போது வராகன் ஓடிவந்து உதயணன் செயலைக் கூறினான். பிரச்சோதனன் சினந்து, அருகிலிருந்த நால்வகைப் படைத் தலைவரையும் உதயணனைப் பிடித்துவருக என்று ஏவினான். அவர்களும் படைகளைத் திரட்டிக்கொண்டோடினர். அப்போது சாலங்காயன், 'உதயணன் செயலைத் தவறென்று கூறமுடியாது. அரசர்க்குரிய

செயலையே செய்தான். அவனும் தங்களுக்கு நிகரான அரசனே' என்று சினத்தை மாற்றினான். சென்ற வீரர்களும் யூகியின் படைவீரர்களாலடிபெற்றுச் சிதறியோடினர்.

இதற்குப் பிறகு, உதயணன் பத்திராபதியை விரைவாகச் செலுத்திக்கொண்டு சென்றான். ஏறக்குறையப் பிரச்சோதனன் நாட்டெல்லையைக் கடக்கும்போது பாலைநிலந் தென்பட்டது. அங்கே, முதலில் இவனுடைய கோடபதி என்னும் யாழ் ஒரு மூங்கிலிற் சிக்கி வீழ்ந்தது. அதை யறியாத உதயணன் சிறிது தூரம் சென்ற பிறகு வயந்தகன் அதையறிந்து கூறினான். உதயணன் புன் முறுவலுடன், 'தந்த தெய்வம் தானே தரும். காலம் வீணின்றிக் கடக்க வேண்டும்' என்று கூறி விரைந்து செலுத்தினான். எல்லையைக் கடக்கும்போது, பத்திராபதி மெலிந்து விழும் நிலையிலிருப்பதை அறிந்து நால்வரும் கீழே இறங்கினர். பிடியும் விழுந்தது. உதயணன் அது உயிர்விடும் நிலையிலிருக்கும்போது அது புண்ணிய கதியை அடையத் தகுந்த மந்திரத்தை அதன்காதில் ஓதினான். பிறகு, அன்புடன் அதைத் தடவிக்கொடுத்து, 'மறுபிறப்பிலும் என்னுடன் பிறக்கும்படி இறைவன் அருள் புரியட்டும்' என்று கண்ணீர் பெருகக் கூறினான். அதுவும் உயிர்விட்டது.

பிறகு, அது வேடர் வாழும் இடமென்றறிந்து அங்கே தங்காமல் வாசவதத்தையை மெதுவாக அழைத்துச்சென்றனர். சிறிது தொலைவு செல்வதற்குள் மிருதுவான அவளுடைய கால்கள் கொப்புளங்கொண்டன. ஒரு பொய்கையைக்கண்டு பிரயாணத்தை நிறுத்தி இனிமேல் நடந்து செல்வது தகாது என்று அங்கே தங்கினர்.

பொய்கைக்கரையிலே முள்ளிலவப் புதர் ஒன்று இருந்தது. அந்த இடத்தைச் சுத்தஞ்செய்து இலைகளைப் பரப்பிப் படுக்கைபோலாக்கி வாசவதத்தையைப் படுத்திருக்கச் செய்தனர். கதிரவன் மறைந்தான்.

அப்போது வயந்தகன் உதயணனை வணங்கிப் புட்பக நகரத்திற்குச் சென்று இடவகனுடைய படைவீரர்களுடன் பல்லக்கு முதலியவற்றைக் கொண்டுவருவதாக விடைபெற்றுச் சென்றான். காஞ்சனமாலையை வாசவதத்தையுடன் இருக்கச்செய்து உதயணன் வாளேந்திய கையுடன் காத்து நின்றான். விடியற்காலையில், வேடர் கூட்டமொன்று திடீரென்று வளைத்தது. உதயணன் திடுக்கிட்டு வாசவதத்தையைக் காஞ்சனமாலையுடன் இருக்கச்செய்து அவர்களை எதிர்த்தான். முதலில், உதயணனால் வேடர்கள் தோல்வியுற்றாலும், முடிவில் உதயணனுடைய வில் நாணை அறுத்துக் கையைப் பிடித்துக் கட்டிவிட்டனர்.

அப்போது வாசவத்தத்தை நடுங்கிக் கையிலிருந்த தன் நகைகளையெல்லாம் உதயணன் கையிற் கொடுத்து வேடரிடம் கொடுத்துத் தப்பித்துக்கொள்ளும்படி வேண்டினாள். வேடர்களும் உதயணனை நோக்கி நீ யார் என்று கேட்டார்கள். அவன், ‘உதயணனுடைய வணிகர் நாங்கள். என் கையை அவிழ்த்துவிட்டால் ஓரிடத்திற் புதைத்துவைத்திருக்கும் எங்கள் பொருள்களைக் கொடுக்கிறோம்’ என்று கூறினான். அவர்களும் அவனை அந்த இடத்தைக் காட்டும்படி அழைத்தனர். அவன் இடங் காட்டுவோன்போலப் பல இடங்களுக்கும் இழுத்துச் சென்றுகொண்டிருந்தான். வாசவதத்தையும் காஞ்சனமாலையும் நடுங்கிக்கொண்டு நின்றனர்.

இவ்வாறு இவர்கள் திகைத்துக்கொண்டு நிற்கும் போது, வயந்தகன் புட்பக நகரத்திலிருந்து படையுடனும் வாகனங்களுடனும் வந்து சேர்ந்தான். வேடர்களும் ஓடிவிட்டனர். படையைக் கண்டவுடன் உதயணன் மகிழ்ந்தான். பிறகு, ஓய்வெடுத்துக்கொண்டு உருமண்ணுவா வாழும் சயந்தி நகரத்தை அடைந்தான். சயந்தி நகரம் உதயணன் ஆட்சிக்குட்பட்ட நகரம். உதயணனால் உருமண்ணுவாவுக்கு அளிக்கப்பட்டது.

5. உதயணன் வாசவதத்தையைத் திருமணம் புரிதல்

உருமண்ணுவா உதயணன் வருகையை அறிந்து நகரத்தை அலங்கரித்தான். நகரத்து மக்களெல்லோரும் தங்கள் அரசன் வரவைக் குதூகலத்துடன் எதிர்பார்த்தனர். உதயணனும் வாசவதத்தையும் வந்தபோது மங்கலவாத்தியங்கள் முழங்க எதிர்கொண்டனர்; கண் குளிரக்கண்டு மலர்களைத் தூவி வாழ்த்தினர். "எங்கள் துன்பத்தைப் போக்கும் இளங்கதிரவனே! வருக! ஆண்சிங்கமே! வருக!" என்று உதயணனையும், "திருமகள்போல எங்கள் இறைவனுடன் வரும் புண்ணியப் பாவையே! வருக! பிரச்சோதனன் குலமகளே! வருக!" என்று வாசவதத்தையையும் வரவேற்றனர். இதற்கெல்லாம் ஆதாரமான யூகியைப் புகழ்ந்தனர்.

உதயணன் இவ்வாறு பெருமகிழ்வுடன் வரவேற்கும் தன் குடிகளின் அன்புக்கு வியந்து தன் அரண்மனையை அடைந்தான். வாசவதத்தை வழிவந்த களைப்பெல்லாம் நீங்கி அந்தப்புரத்திலே ஆறுதலடைந்தாள். நகரம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

அரண்மனைப் பெருங்கணி (தலைமைச் சோதிடன்) வந்து திருமணத்திற்குரிய நல்ல நாளைத் தெரிவித்தான். திருமணத்தை அறிவிக்கும் வள்ளுவன் யானையின் மேலே முரசத்தை வைத்து அறைந்து நகரத்திற்குத் தெரிவித்தான். நகரமக்கள் நகரத்தை அழகுற அலங்கரித்தனர். உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் மிகச் சிறப்புடன் திருமணம் நடந்தது. நூல்முறைப்படி திருமணத்திற்குப் பின்னர் நடக்கவேண்டிய எல்லாச் சடங்குகளும் நடந்தன. உதயணன் தன் தலைநகரத்தை

ஆருணி பிடித்துக்கொண்டிருப்பதையும் நினையாமல் வாசவதத்தையுடன் பொழுதுபோக்கிக்கொண்டிருந்தான். உருமண்ணுவாவும் வயந்தகனும் என்ன செய்வதென்று அறியாமல் யூகியின் வரவை எதிர்பார்த்தனர்.

வயந்தகனைத் துணையாக்கி உதயணனையும் வாசவதத்தையையும் கௌசாம்பியை நோக்கிப் போக்கிய யூகி சாங்கியத்தாயுடன் உஞ்சையிலுள்ள சாதகன் என்னும் குயவன் வீட்டிலே பின்னும் சிலநாள் மறைந்திருந்தான். உதயணன் வாசவதத்தையைக் கொண்டுசென்றதால், அந்நகரரசன் மேலே என்ன நடவடிக்கை எடுக்கிறான் என்பதை அறியவே தாமதமாக இருந்தான். பிரச்சோதனன் விருப்பப்படியே உதயணன் வாசவதத்தையைக் கொண்டுசென்றான் என்று நகரமக்கள் பேசிக்கொள்வதை அறிந்தபிறகு இனி ஏதும் இடையூறு இராதென்று தெளிந்து சாங்கியத் தாயை அழைத்துக்கொண்டு இயந்திர வண்டியொன்றில் ஏறிப் புட்பக நகரத்தை அடைந்தான்.

புட்பக நகரத்தை ஆளும் இடவகன் யூகியிடம் உதயணன் உச்சயினியை விட்டு நீங்கியதுமுதல் நடந்தவற்றையெல்லாம் விளங்கக்கூறினான். மேலும், தன் நாட்டைப் பகைவனிடமிருந்து மீட்பதற்குரிய முயற்சி சிறிதுமின்றியிருப்பதையும் கூறினான். யூகி புன்முறுவலுடன், இதுவரையிலே துன்பத்திலே வருந்திய அரசன் சிறிதுநாள் இன்பத்திலே ஈடுபட்டிருப்பது இயல்பே என்று சமாதானம் கூறினான்.

பிறகு, சாங்கியத்தாயிடம் தனிமையாக இருந்து ஆராய்ந்து உதயணனுக்கு நன்மையைத் தருவதாகிய சூழ்ச்சியொன்றைச் செய்தான். முதலிற் சாங்கியத்தாய்

அதற்கு உடன்படவில்லை. "நண்பர்கள் சோர்வுற்ற போது வீரம்போலவும், குற்றத்தை நீக்கும்போது ஆசிரியர் போலவும், ஒற்றுமைக்கு உயிரைப்போலவும் இருப்பதல்லாமல் தீயவழியில் நடக்கும்போது அதை நீக்குவதிற் பகைவர்போலவே இரக்கமின்றிநடந்து கொள்ளவேண்டும்" என்று விளக்கிக் கூறியபிறகு அவள் உடன்பட்டாள்.

6. வாசவதத்தையைப் பிரிதல்

ஆகவே, யூகியின் சூழ்ச்சிக்கிசைந்த சாங்கியத்தாய் சயந்திநகரத்தை அடைந்தாள். உதயணன் சாங்கியத் தாயை அன்புடன் வரவேற்றான். தான் உச்சயினியை விட்டுப் பிரிந்தபிறகு நடந்ததைக் கூறும்படி கேட்டான். சாங்கியத்தாய், 'நீ வாசவதத்தையைப் பிடியின்மேல் ஏற்றிக்கொண்டு வந்தபிறகு போர்செய்யவந்த வீரர்களை யெல்லாம் வென்று அந்நகரிலே மறைவான இடமொன்றில் என்னுடன் யூகி தங்கியிருந்தான். நகரில் உன்னைப் பற்றி ஏதாவது வதந்தி தவறுதலாக வழங்குமோ என்று கவனித்தோம். ஏதும் இல்லாமையால் இயந்திர வண்டியில் ஊர்ந்து வேடர்கள் வாழும் இடமொன்றை அடைந்தோம். அங்கே யூகி ஏதோ வேலை செய்ய வேண்டுமென்று தங்கிவிட்டான். என்னை முன்னே அனுப்பினான்' என்று கூறினாள்.

பிறகு, சாங்கியத்தாய் உதயணனிடம் விடைபெற்று வாசவதத்தையைக் கண்டாள். இளமைமுதல் தன்னை வளர்த்த சாங்கியத்தாயைக் கண்டவுடன் தாய்ப்பசுவைக்கண்ட கன்றைப்போல் வாசவதத்தை தழுவி மகிழ்ந்தாள். வாசவதத்தையின் பிரிவால் அவள் அன்னை தோழிகள் முதலினோர் வருந்துவதைக் கேட்டுக் கண்ணீர்விட்டாள். சாங்கியத்தாய் அவளைத் தேற்றினாள். பிறகு, தனியே அழைத்துச்சென்று, பிரச்சோதனன் நகரம் அருகிலேயிருப்பதை விளக்கிக் கவலையை நீக்கினாள். அவள் தெளிந்தபிறகு, 'உதயணன் தன் பகைவனை ஒழித்துக் கௌசாம்பியை மீட்காமலிருக்கிறான். மேலும், ஆட்சியைப்பற்றிய சிந்தனையே கொள்ளவில்லை. ஆகையால், சிறிதுகாலம் நீ உதயணனைப் பிரிந்திருக்கும்படி யூகி செய்வான். நீ அதற்கு உடன்பட்டிருத்தல்வேண்டும்.

அவ்வாறிருந்தால், இழந்த அரசை உதயணன் பெற முடியும்' என்ருள். அதைக்கேட்டவுடன் உயிரிழந்தவள் போல வருந்தினுலும் பிற்காலத்திலின்பம் உண்டாகு மென்று ஒப்புக்கொண்டாள்.

சாங்கியத்தாய் இருவரிடமும் விடைபெற்று யூகியை அடைந்து நிகழ்ந்ததைக் கூறினுள். சயந்தி நகரத்திற்குச் சாங்கியத்தாயை அனுப்பியபிறகு, இடவகன் யூகி அவல் விக்கி யிறந்தானென்னும் வதந்தியைப் பரப்பிவிட்டான். நகரமக்கள் எல்லோரும் வருந்தினர். யூகியும் மறைந்து வசித்தான். இங்கிலேயிலிருந்த யூகி ஒரு படத்தையெழுதி உதயணனிடம் காட்டும்படி கொடுத்தான். அப்படத்திலே நான்கு கண்களுடன் உதயணன் உருவமிருந்தது. அந்தக் கண்கள் நான்கில் மேலிருந்த இரண்டு கண்களில் ஒன்று மழுங்கியிருந்தது. சாங்கியத்தாய் அப்படத்தை உதயணனிடம் கொண்டு காட்டினுள். அவன் அப்படத்தின் குறிப்பையெல்லாம் நன்ருக அறிந்து, 'யூகிக்கு ஏதோ கெடுதிபோல இருக்கிறதே! இந்தக் கண்கள் நான்கும் என் நண்பர்கள். அவர்களில் மேம்பட்ட இருவரும் மேலிருகண்கள். அக்கண்களில் மழுங்கியிருப்பது யூகியைக் குறிக்கிறது.' என்று தெளிவாகக் கூறிச் சாங்கியத்தாயை வினவினுன்.

சாங்கியத்தாயும் கண்ணீர்வடிய, 'யூகி உஞ்சையிலிருந்து வருகையில் அவலைத்தின்னும்போது விக்கிக் கொண்டு இறந்தான்' என்று கூறித் தேம்பித் தேம்பி அழுதாள். உடனே உதயணன் மூர்ச்சையாகித் திடீரென்று விழுந்தான். வாசவதத்தையும் அவன் மார்பிலே விழுந்து மூர்ச்சையடைந்தாள். அருகிலிருந்தோர் மூர்ச்சையைத் தெளிவித்து ஆறுதல் கூறினர். அப்போதும் ஆறுதலடையாமல் வருந்தியபோது, அங்கிருந்த

அறிவாளிகள், 'பகைவர்கள் நிலையுணர்ந்தும் இவ்வாறு வருந்தலாகாது. தளர்ச்சியின்றி அவர்களை ஒழிக்க முயலவேண்டும்' என்று தெளிவித்தனர். அப்படியும் ஆறுதலடையாதவனை உருமண்ணுவாவை உடனிருந்து ஆறுதலுக்கு முயலச்சொல்லினர். அவனும் அவ்வாறே உடனிருந்து தேற்றிவந்தான்.

அம்முயற்சிகள் ஒன்றில் நீர்விளையாட்டாகும். உதயனனும் நீர் விளையாட்டிற்கு ஒப்புக்கொண்டான். ஆகவே, முரசறைந்து நகரத்தார்க்கறிவித்து நல்ல நாளொன்றிலே புறப்பட்டனர். இலாவாணம் என்றொரு நகரம் உதயணனுக்கு உண்டு. அதன் அருகே ஒரு பெரிய மலையிருந்தது. அங்கே யாவரும் போய்க் கூடாரம் அடித்துத் தங்கினர். உதயணனும் வாசவதத்தையும் தங்களுக்கென்று அமைக்கப்பட்ட கூடாரத்தில் தங்கினர். அருவிகளில் நீராடுவதும் சோலைகளில் உண்பதும் விளையாடுவதுமாகப் பல நாட்கள்வரையில் அங்கேயே யாவரும் மகிழ்ந்தனர்.

அங்கே யிருக்கும் நாட்களில் ஒரு நாள் உதயணனுடைய உத்தியோகத்தர்கள் அம்மலை வளத்தை அவனுக்குக் காட்டிவந்தனர். அப்போது ஒரு முனிவருடைய தவப்பள்ளியை அடைந்தனர். அந்த முனிவர் முக்கால நிகழ்ச்சிகளையும் அறிவார். அவரை உதயணன் கண்டு வணங்கினான். அவர் உதயணனை வாழ்த்தி அமரச் சொன்னார். அவன் ஒரு பசுமரத்தின் அடியிலே அமர்ந்தான். அப்போது அவன் கையிலிருந்த வெண்மையான மலரொன்று தவறிக் கீழே அவன் காலின் மேல் விழுந்தது. அம் முனிவர் அவனை நோக்கி, 'நீ பச்சை மரத்தின் அடியில் இருந்ததால் உன் தோழன் உயிரோடிருப்பதையும், திரும்பவும் அவனை அடை

வதையும் அறியலாம். உன் கையிலிருந்த வெண்மலரின் வீழ்ச்சி நீ இப்போது அனுபவிக்கும் இன்பத்திற்கு இடையூறு உண்டாவதைத் தெரிவிக்கிறது. அது உன் காலிலேயே வீழ்ந்ததால் அந்த இன்பம் நீ திரும்பவும் அடைவதைஅறிவிக்கிறது' என்ருர். மேலும், 'நீ பூமியின் மேல் அமர்ந்ததால் உன் தலைநகரத்தையும் நாட்டையும் அடைய முடியும்' என்றுங் கூறிஞர். உதயணன் ஒருவாறு தெளிந்து தன் கூடாரத்தை அடைந்தான்.

மற்ருருநாள் கொடிகளாலாகியஇயற்கைப்பந்தலையும் நெருங்கிய மரங்களின் நிழலையுமுடைய ஒரு பொழிலில் உதயணன்மட்டும் தங்கியிருந்தான். அப்போது, அங்கே தவஞ்செய்துகொண்டிருக்கும் அரச முனிவர் ஒருவரின் மகள் விரிசிகை யென்னும் சிறுமி யொருத்தி பலநிற மலர்களைப் பறித்துவந்து உதயணனிடம் இவற்றை மாலையாகக் கட்டிக் கொடுங்கள் என்று வேண்டிஞள். அவனும் அப்பெண்ணின் அழகையும் துணிவையுங் கண்டு வியந்து, அழகான மாலை யொன்றைக் கட்டிக் கொடுத்தான். அதை அணிந்து கொள்ள முடியாமல் அப்பெண் திகைத்தாள். அவன் அணிந்து விடுத்தான். அவள் அவன் அன்பிலும் தோற்றத்திலும் ஈடுபட்டு அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்ருள்.

இலாவாண நகரத்தின் அருகே யூகி மறைந்திருந்தான். அவன் அந்நகரத்திலுள்ள அரண்மனைக்கும் தானிருக்குமிடத்திற்கும் ஒரு சுருங்கை அமைத்தான் பிறகு, உதயணனையும், வாசவதத்தையையும் அந்த அரண்மனையிலே நீர் விளையாட்டு முடியும் வரையில் தங்கியிருக்க எற்பாடு செய்வித்தனன்.



உதயணனும் விரிசிகையும் [பக்கம். 31]

மற்றொருநாள் உதயணன் தோழர்கள், 'ஒருவேலையு மில்லாமற் சும்மா இருந்தால் செல்வம் நம்மை வெறுக்கும்' என்றார்கள். வாசவதத்தையைப் பிரிய மனம் வராததால் அவன் ஒன்றும் கூறாமல் இருந்தான். வாசவதத்தை தனக்குப் பலவகை மலர்களால் ஆகிய மாலை வேண்டும் என்று கேட்டபொழுது அவள் விருப்பத்தை நிறைவேற்ற குதிரையின்மேல் ஏறிக்கொண்டு மலைச்சாரலை அடைந்தான். அவன் தோழர்கள் வாசவதத்தையைப் பிரிக்க இதுவே காலமென்று துணிந்தனர். ஆகவே, வாசவதத்தையையும் சாங்கியத் தாயையும் சுருங்கை வழியே யூகியின் இருப்பிடத்திற்கு அனுப்பிவிட்டுக் கள்வர் கூட்டம் அரண்மனைக்கு நெருப்பு வைத்துவிட்டதென்று எங்கும் பேச்சைக் கிளப்பிவிட்டனர். கொலைத் தண்டனைபெற்ற இருவரை அந்த அரண்மனையிலே நெருப்பில் வேகும்படி தள்ளிவிட்டனர். வாசவதத்தையின் அணிகளைக் கொண்டுவந்து வேகும் நெருப்பிலே போட்டனர்.

உதயணன் வாசவதத்தைக்கு வேண்டிய மலர்களையும் தழைகளையும் பறித்துக்கொண்டு திரும்பி, அரண்மனைக்கு வந்தபோது அரண்மனை எரிவதைக் கண்டான். உருமண்ணுவா சிலரைக் கொள்ளைக் கூட்டத்தாரென்று விரட்டிக்கொண்டிருந்தான். காஞ்சனமாலை இடைவிடாமற் புலம்பிக்கொண்டு, 'வாசவதத்தையே! உதயணன் மனைவியே! பிரச்சோதனன் மகளே! யாழிசைக் குரியவளே! பெண்விளக்கே! பொன்னே! அன்னையே! திருவே! உருவே! நெருப்பில் அகப்பட்டிறந்தனையே!' என்று அலறிக்கொண்டிருந்தாள். இந்த அலங்கோலத்தைக் கண்ட உதயணன் செயலற்றுத் திடீரென்று பூமியில் விழுந்தான். தோழர்கள் அஞ்சி

மூர்ச்சை தெளிவித்தனர். அவன், 'என் காதலி இறந்த தீயில் நானும் விழுவேன்' என்று ஓடினான். அவர்கள் அரும்பாடுபட்டு அவனைத் தடுத்துப், 'பகைவர்கள் பழிப்பார்கள். யூகி யில்லாவிடின் உதயணனால் ஒன்றும் முடியாது என்பார்கள். ஆகையால், வீரர்களுக்குரிய நிலையை விடாமல் நம் பகைவர்களை ஒழிக்க வழி தேடு வதே உறுதி' என்று கூறினார்கள்.

உதயணன் ஒருவாறு தெளிந்து, 'எரிகின்ற நெருப்பை அவித்து வாசவதத்தையின் உடம்பைக் காட்டுங்கள்' என்று வேண்டினான். அவர்களும் நெருப்பை நீர்விட்டுத் தணித்தார்கள். குற்றவாளி களின் உடம்புகளைச் சாங்கியத்தாய் வாசவதத்தை ஆகியவர்களின் உடல்களென்று காட்டினார்கள். உருகிக்கிடந்த வாசவத்தையின் ஆபரணங்களையும் காட்டினார்கள். அவன் அந்த அணிகலன்களைப் பார்த் துப் பார்த்துக் கண்ணீர் வடித்தான். மந்திரிகளுந் தோழர்களும் அவனைப் பலவகையாலுந் தெளிவுபடுத்தி வந்தனர். அவனுடைய மெலிவை யறிந்து பகைவர் வாராதபடி நால்வகைச் சேனைகளையும் நகரின் நாற்புறங் களிலும் நிறுத்தினர். உதயணன் நாளடைவில் ஒருவாறு தெளிவடைந்து வந்தான்.

அவனுக்கு இனி யாதொரு கெடுதியும் நேரா தென்றறிந்த பிறகு, யூகிக்கு அவன்நிலையைத்தோழர்கள் அறிவித்தனர். யூகியும் சாங்கியத்தாயும் வாசவ தத்தையை உதயணன் பிரிவால் வருந்தாவண்ணம் தேற்றி, மருந்தினால் உருவத்தை மாற்றிக்கொண்டு பார்ப்பனர் வடிவுடன் அந்நாட்டை விட்டு, உருமண்ணு வாவின் தந்தையின் தோழனான விசயவரன் என்பவன் நாடாகிய அங்கநாட்டிற் சண்பை யென்னும் நகரில், பெரு வணிகனான மித்திரகாமன் வீட்டில் தங்கினர்.

7. பதுமாவதி மணம்

யூகி இறந்தானென்றும், வாசவதத்தை நெருப்பிலே அழிந்தாளென்றும், இவற்ருல் உதயணன் வருந்தி மெலிந்தானென்றும் பாஞ்சால நாட்டரசனுன ஆருணி மகிழ்ந்தான். கௌசாம்பியை இனி உதயணன் கைப் பற்ற முடியாதென்ற நினைவாலே கவலையின்றி யிருந்தான். இந்த நிலையிலேதான் ஆருணியை எதிர்க்க வேண்டுமென்று உதயணன் தோழர்கள் அவனுக்குக் கூறினர். ஆனுல், 'யூகியையும், காதலியையும் இழந்த எனக்கு நாடு வேண்டா' மென்று உதயணன் மறுத்து விட்டான்.

இதைக்கேட்ட தோழர்கள் வேறு வழியைச் சிந்தித்தனர். மகத நாட்டரசனுன தருசகனுடன் உதயண னுக்கு நட்புண்டாக்க வேண்டுமென்பதே அவ்வழி. உதயணனுக்கு இசைச்சன் என்ெருரு பார்ப்பன நண்பன் இருந்தான். அவன் உதயணனிடம் சென்று, 'மகத நாட்டின் தலைநகரான இராசகிரியம் என்னும் நகரிலே ஓரந்தணன் உள்ளான். அவன் இறந்தவரையும் பிழைப்பிக்கும் ஆற்றல் வாய்ந்தவன். அவனிடம் சென்று பார்ப்போம். அவனுல் வாசவதத்தையைப் பெற்ருலும் பெறலாம்' என்ருன். உதயணன் வாசவதத்தையை அடைந்தாலும் அடையலாம் என்ற அச்சொல்லுக்கு மிகவும் மகிழ்ந்து கடலில் முழுகுவோன் ஒரு துரும்பு கிடைத்தால் அதைக்கொண்டு கரையேறலாம் என்று நம்புவதைப்போல நம்பி ஒப்புக்கொண்டான்.

ஆகவே, நண்பர்களும் பல வீரர்களும் அந்தணர் வேடம் பூண்டு, மகத நாட்டை அடைந்து, இராசகிரியம் என்னும் நகரில் காமன் கோயிலுக்குப் பக்கத்திலுள்ள

ஒரு பொழிலில் தவப்பள்ளியில் தங்கினர். அங்கே காகதுண்டகர் என்றொரு முனிவர் இருந்தனர். உதயணன் தோழர்கள் அவரையடைந்து உதயணன் நிலையைக் கூறி அவனுக்கு ஆறுதல் சொல்லவேண்டுமென்று வேண்டினர்: கூறவேண்டிய முறையையுங் கூறினர். அவர் ஒப்புக்கொண்டு உதயணனிடம் வந்து, 'இரண்டு மாதம் நீர் இங்கே நோன்பாற்றிக்கொண்டிருந்தால், நான் வாசவதத்தையை உயிருடன் நீர் அடையும்படிச் செய்வேன்' என்று கூறிச்சென்றனர். தோழர்களும் இம் முனிவர்க்கு மிகவும் எளிது இது என்று வற்புறுத்திக் கூறினர். உதயணனும் மனம ஒப்பினான். இந்த இரண்டு திங்களில் எப்படியாவது மகத மன்னனுடன் நட்புண்டாக்க வேண்டுமென்று தோழர்கள் உறுதி பூண்டனர்.

அங்கே யிருக்கும்போது காமதேவனுக்குத் திருவிழா நடந்தது. மணமாகாத பெண்கள் காமதேவனை வணங்கி, 'நாங்கள் விரும்பிய கணவரை மணக்க அருள் புரியவேண்டும்' என்று வழிபடுவது அத்திருவிழாவின் நோக்கம்.

அங்நகரத்தரசன் தருசகனுக்குப் பதுமாவதி என்றொரு தங்கை இருந்தாள். அவளுக்கு இன்னும் மணமாக வில்லை. அவள் காமதேவனை வழிபடப் பல்லக்கிலேறி வந்தாள். பல்லக்குக் காமதேவன் கோயிலுக்கு எதிரில் இறக்கப்பட்டது. அதிலிருந்து பதுமாவதி வெளிவந்த போது, எதிரிலே ஒரு புன்னைமரத்தின் நிழலிலே வாசவதத்தையின் நினைவிலே மூழ்கிக்கிடந்த உதயணன் அவளைப் பார்த்தான். வாசவதத்தையைப் போன்றே அழகிற் சிறந்தவளாக அவள் அவன் கண்ணுக்குத் தென் பட்டாள். அவளும் அவனைப் பார்த்துத் திகைத்தாள்.

இருவரும் ஒருவரையொருவர் நோக்கிக் காதல் கொண்டனர். பதுமாவதி தன் தோழி யாப்பியாயினியுடன் காமன் கோயிலுட் புகுந்தாள்; காமதேவனை வழி பட்டாள். ஒரு முதிய தாதி, 'பதுமைக்கு உதயணன் போன்ற காதலன் கிடைக்கவேண்டும்' என்று காம தேவனை வேண்டினள். பதுமையும் தான் கண்ட அந்தணன் உதயணன்போலவே யிருக்கிறான் என்று எண்ணினாள்.

வழிபாடு முடிந்தவுடன், பதுமை பல்லக்கிலேறிப் புறப்பட்டாள். ஐராவதி என்னும் பதுமையின் தோழி யொருத்தி உதயணனைப் பார்த்து, இந்த அந்தணன் தானம் விரும்பி நிற்பவன் என்று நினைத்துக்கொண்டு பல்லக்கின் பின் சென்றாள். அவளை உதயணன் கூப் பிட்டுப் 'பல்லக்கிற் செல்பவள் யார்?' என்று வினவினான். அவள், 'இந்நகரத்தரசன் தருசகனுடைய தங்கை; பதுமை என்னும் பெயருடையாள். காமன் விழா முடிவிலே அந்தணர்களுக்கு நிறையப் பொருள் கொடுப் பாள். நீர் அதுவரையில் இங்கே யிருக்கலாம்' என்றாள். பிறகு, 'நீர் யார்?' என்று வினவினாள். உதயணன், 'நான் காந்தார நாட்டினன்; இரத்தினபுரம் என் நகர்; தந்தை சாண்டிய னென்னும் அந்தணன்; என் பெயர் மாணகன்.' என்றான்.

மாலைநேரம் வந்தது. உதயணன் தன் தோழரிடம் தான் பதுமையைக் காதலித்ததைக் கூறினான். பதுமா வதி உதயணன் நினைவாகவே அன்றைய இரவைக் கழித் தாள். மறுநாளும் காமன் கோயிலுக்குப் பதுமை வரும்போது உதயணன் அவளைக் கண்டான். பதுமை யும் பார்த்தாள். இவ்வாறு பலநாள் வரையில் ஒருவர்க்கொருவர் பார்த்து மகிழ்ந்தனர்.

ஒருநாள், அங்கேவந்த பதுமாவதி இராவதியின் கழுத்திலே கைப்போட்டுக்கொண்டு உதயணனை நோக்கி நின்றாள். உதயணனும் வயந்தகன் தோளிலே கையைவைத்துக்கொண்டு பதுமையை நோக்கினன். பதுமை இராவதியைப்பார்த்து, 'நீ இவனை அறிவாயோ?' என்றாள். இராவதி தான் அறிந்தவாறு அவனைப்பற்றிக் கூறினாள். உதயணன், 'இந்தப்பெண் என்னை விரும்புகிறாள்' என்று தோழர்களிடம் கூறினான். இசைச்சன் அதைக்கேட்டு,' இந்நாட்டுப்பெண்கள் ஒழுக்கத்திற் சிறந்தவர்கள். அவர்களைப்பற்றித் தவறாக நினைத்தல் தவறு' என்றான். உதயணன் அவள் விரும்புகிறாளென்பதை விளக்கிக் காட்டுவதாகக்கூறி ஒரு மலர் மாலையைக்கட்டி அங்கிருந்த குளக்கரையிலுள்ள மரக்கிளையொன்றிலே அவள் கண்காணக் கட்டிவைத்தான். அதைப் பார்த்துக்கொண்டிருந்த பதுமை, தனியே சென்று, அதையெடுத்துக்கொண்டு தன் மோதிரத்துடன் ஒரு மாலையைக் கட்டிவைத்துவிட்டு வந்தாள். உதயணன் அதையெடுத்துவந்து தோழர்களுக்குக் காட்டினான். அவர்கள் பதுமையின் காதல் உண்மையென்று ஒப்புக்கொண்டனர்.

அன்றிரவிலே வாசவதத்தை உதயணன் கனவிலே மெலிந்து வாடிய வடிவுடன் காணப்பட்டாள். உதயணன் மகிழ்ந்து, 'வாசவதத்தையே! என் மெலிவுதீர வந்தனையோ?' என்று வாய்விட்டுக் கதறினான். வாசவதத்தை, 'என்னை மறந்து வேற்று நாட்டிற்கு வந்தீர்களே!' என்றாள். அவன், 'உன்னைப் பிழைப்பிக்கும் ஒருவன் இங்கிருக்கிறானென்று வந்தேன்' என்றான். அவள், 'பதுமைவைத்த மாலையை அணிந்தீர்கள். ஏன் பொய்ப்பேச்சு?' என்றாள். அவன், 'பதுமையென்ற

பெயரை இப்போதே கேட்கிறேன்' என்முன். இதற்குள் பொழுதுவிடிந்தது.

உதயணன் மனங்கலங்கித் தன் கனவைத் தோழர்கட்குக் கூறினுன். தோழர்கள், 'வாசவதத்தைக்கு விருப்பமில்லாத இச்செயலில் நீ ஈடுபடுவது தவறு' என்ருர்கள். எனினும், உதயணன் பதுமையின் காதலிலே பதிந்த உள்ளமுடையவன் ஆனுன். தோழர்கள் 'நாம் தருசகன் நட்பை நாடிவந்த இடத்தில் இம்மாதிரியான பிழை நேர்கிறதே' என்று வருந்தினர்.

ஒருநாள், உதயணன் வயதுமுதிர்ந்த அந்தணனுகித் தானம் வாங்கச்செல்வோருடன் சென்று, காமன் கோட்டத்திலே இருக்கும் திருமண அறையிலே ஒளித்திருந்தான். பதுமை தற்செயலாக அங்கே சென்றபோது தான் விரும்பிய அந்தணன் நிற்பதைக்கண்டு அவனுடன் காதல் மொழிகளைப்பேசி மகிழ்ந்தாள். பிறகு, வெளி வந்து பல்லக்கிலேறிச் சென்ருள்.

பதுமையைப் பிரிந்திருக்கமுடியாத உதயணன் வேற்று வடிவத்துடன் தருசகன் அரண்மனையை அடைந்தான். அங்கிருந்தவர்களிடம் தருசகனுக்குப் புதையலெடுப்பதிலும், நீர்நிலையறிவதிலும் விருப்பம் இருப்பதைக் கேட்டறிந்து தான் அவற்றில் வல்லவன் என்று அறிவித்தான். அவர்கள் அவனை அரசனிடம் அழைத்துச் சென்றனர். அரசன் உதயணன் கலைகளைக் கேட்டுமகிழ்ந்து, 'என் தந்தை பொருள்களைப் புதைத்துவைத்திருக்கிருரென்று கேட்டிருக்கிறேன். அவைகளைக் காட்ட வேண்டு' மென்ருன். உதயணன் அந்த இடங்களைக் காட்டினுன். தருசகன் வியப்படைந்து அப்பொருள்களை எடுத்துக்கொண்டான். பிறகு 'நல்ல

நீர் இருக்குமிடத்தைக் காட்டுக' என்றான். அவ்வாறே உதயணன் காட்டினான். தருசகன் அகமகிழ்ந்து நீர் நிலைகளை எடுப்பித்தான். ஆகவே, உதயணன்மேலே தருசகனுக்கு அன்பும் மதிப்பு முண்டாகித், தன் அரண் மனையிலே தங்க இடமளித்து, வேண்டும் வசதிகளையுஞ் செய்துகொடுத்தான். உதயணனும் அங்கே தங்கி யிருந்து குறிப்பிட்ட நேரத்திலே பதுமையைத் தனி யிடத்திலே சந்தித்துப் பேசிமகிழ்ந்தான். ஒருநாள், தன் காதலன் யாழிலேவல்லவனென்பதைப் பதுமை அறிந்து, இவன் உதயணன்போலவே இசையிற் சிறந்தவன் என்று மகிழ்ந்தாள். பதுமை இதற்குமுன், 'யாழிற் சிறந்தவன் காமன்; அவனுக்குப்பின் தும்புரு; அவனுக்கு அடுத்தவன் உதயணன்' என்று கேட்டிருக்கிறாள். ஆகை யால், தனக்கு நல்ல யாழொன்றைச் செய்து தரும்படி கேட்டாள். உதயணனும் செய்து கொடுத்தான்.

ஒருநாள், கேகயத்தரசனான அச்சுவப் பெருமகன் என்பவன் பதுமையின் மணத்தை விரும்பி வந்தான். தருசகன் அவனை வரவேற்று விருந்தளித்து மகிழ்ந்தான். அப்போது, தருசகன் பகைவர் பலர் நால்வகைப் படை யுடன்வந்து இராசகிரியநகரத்தைச் சூழ்ந்துகொண்ட னர். உதயணனும் அவன் தோழர்களும் இதை அறிந்து, தருசகனுடன் நட்புக்கொள்ள இதுவே காலமென்று நினைத்தனர்; தங்கள் வீரருடன் குதிரை வியாபாரிகள் போல வடிவங்கொண்டு எதிரிகளின் பாசறையிற் சென்று, 'நாங்கள் தருசகனைப் பகைத்து வந்தோம்'என்று கூறி அங்கே தங்கினர்; நடு இரவில் எழுந்து பாசறையி லுள்ளோரைத் தாக்கினர். பகைவர்கள், 'நமக்குள்ளே பகைவர்களிருக்கிறார்கள் போலும்' என்று நினைத்து ஓடிப்போயினர்.

உதயணன் தோழர்கள் மகிழ்வடைந்து, இனிமேல் நமக்குத் தருசகன் நட்புக்கிடைக்கும் என்று எண்ணினர். வயந்தகன்மூலம், 'உதயணன், வாசவதத்தையை யிழந்த வருத்தந்தீர இந்நாட்டிற்கு வந்தபோது, பகைவர் முற்றுகையை அறிந்து, தானே பகைவரை ஓட்டிவிட்டு உன்னைக்காண வந்தான்' என்று சொல்லியனுப்பினர். பகைவரை வெல்ல வழிதெரியாமல் சிந்தனையிலிருந்த தருசகன் இதைக்கேட்டு, மட்டமற்ற மகிழ்ச்சியுடன் உதயணனையும் அவன் தோழர்களையும் வரவேற்றான். அரண்மனையிலே தங்கச்செய்து, வேண்டிய உபசாரங்கள் புரிந்தான்.

ஓடிய பகையரசர்கள் ஒன்றுகூடினர். பாசறையிலே குழப்பமுண்டானதற்குக் காரணம் குதிரை வியாபாரிகளே என்று துணிந்தனர். இனிமேல், வேற்றாரை நம்பலாகாதென முடிவுசெய்தனர். மறுபடியும் பெரும்படை திரட்டிக்கொண்டு இராசகிரியத்தை முற்றுகை செய்தனர். உதயணனும் கேகயனும் தருசகன் வேண்டுகோளின்படி தம் படையுடன் சென்று, பகைவரைத் தாக்கினர். அப்போரிலே, கேகயன் இறந்தான்; உருமண்ணுவா எலிச்செவியரசனாற் சிறைப்பட்டான். எனினும், உதயணனே வெற்றிபெற்றான்:

போர்முடிவையறிந்த தருசகன் மகிழ்ந்து, உதயணனை வரவேற்றுப் பெருவிருந்து செய்து மகிழ்ந்தான். பிறகு, தன் தங்கை பதுமையை உதயணனுக்குக் கொடுக்க விரும்பி முதிய அமைச்சன் மூலம் அவனுக்குத் தெரிவித்தான். உதயணன் உள்ளத்திலே மகிழ்ந்தானாயினும், 'வாசவதத்தையாலும் யூகியாலும் கலங்கியிருக்கிறேன். இப்போது மணத்திலே விருப்பமில்லை' என்று கூறினான். பிறகு, அந்த அமைச்சன்,

'இந்த வேண்டுகோளை மறுத்தல் முறைமையன்று' என வேண்ட ஒப்புக்கொண்டான். பதுமைமட்டும் 'நாம் விரும்பிய மாணகனை மணவாமல் வேருெருவனை மணப்பது கற்புக்குப்பிழை' என்று நினைந்து கலங்கியிருந்தாள்.

உதயணன் நாமே மாணகன் என்பதைப் பதுமைக்கு அறிவிப்பது எப்படியென்று சிந்தித்துக் கொண்டிருந்தான். அப்போது இசைச்சன் என்னும் அந்தணத்தோழன் பதுமையின் தோழியான யாப்பியாயினியை விரும்புவதை அறிந்து, அவர்களுக்கு மணம் புரிவிக்க உறுதிகொண்டான்; அரசனிடம் வயந்தகன் மூலமாக, 'என் உயிர் நண்பன் இசைச்சன் பெற்ருேரை யிழந்தவன். அவனுக்கு ஓரந்தணக்கன்னியை மணம் புரிவிக்க வேண்டும். அதன் பிறகே என் மணத்தை நடத்தவேண்டும்' என்று கூறியனுப்பினுன்.

தருசகனும் அவ்வாறே ஒப்புக்கொண்டு பதுமையின் தோழியான யாப்பியாயினிக்கும் இசைச்சனுக்கும் திருமணம் நடப்பித்தான். அதன் பிறகு யாப்பியாயினியின்மூலம் உதயணனே மாணகன் என்பதைப் பதுமை அறிந்து மகிழ்ந்தாள். பிறகு, பதுமைக்கும் உதயணனுக்கும் மணம் நிகழ்ந்தது.

8. உதயணன் ஆட்சியைப் பெறுதல்

தருசகன் ஒருநாள், "உதயணன் நம் பகைவரை வென்றவன்; மேலும் நம் சுற்றத்தானாகவும் ஆய்விட்டான்; ஆகவே, அவன் பகைவனான ஆருணியை வென்று கௌசாம்பியை உதயணனுக்கு அளிப்பது நம் கடமை" என்று எண்ணித், தாமேசென்று எல்லாத் தொழில்களையும் செய்யவல்ல வருடகாரன் முதலிய மந்திரிகளையும் நால்வகைப் படைகளையும்,பதுமைக்குரிய சீதனப்பொருள்களையும் அளித்தான். 'மேலும் வேண்டுவனவற்றை அப்போதைக்கப்போது வரவிடுவேன்' என்று, மந்திரிகளிடம் கூறினான். 'ஆருணியைத் தொலைத்துவிட்டே நீங்கள் வரவேண்டும்' என்றும் மந்திரிகளுக்கு ஆணையிட்டான். இவ்வாறு தருசகன் துணைகிடைத்ததற்கு உதயணன் தோழர்கள் மகிழ்வடைந்தார்கள். அவர்கள் நினைத்துவந்தகாரியம் அது தானே? ஆகவே, யாவரும் கௌசாம்பியை நோக்கிப் புறப்பட்டனர். செல்லும்போது, உதயணனுக்குத் தருசகன், 'நீ விரும்பினால் ஆருணியைவெல்ல உஞ்சையரசன் பிரச்சோதனனும் நானும் அன்புடைய பிற அரசர்களும் துணை புரிவோம். உன் கருத்துக்கு ஏற்றதைச்செய்க' என்று உபசாரம் கூறினான். உதயணனும், 'உருமண்ணுவாவைப் பதினைந்து தினங்களில் சிறையிலிருந்து விடுவித்து அனுப்பவேண்டும்' என்று கேட்டுக்கொண்டான். தருசகன், 'அவ்வாறே செய்வேன்' என்றான். பிறகு, தருசகன் திரும்பினான்.

உதயணன் கௌசாம்பியைநோக்கிச் செல்லும் போது, அவன் தம்பிகளாகிய பிங்கலனும் கடகனும் பன்னிரண்டாயிரம் போர்வீரரோடுவந்து கலந்தனர். தன் தம்பிகளைக்கண்ட உதயணன் மகிழ்ந்து அன்போடு

தழுவிக்கொண்டு, 'மந்திரிகளின் சொற்படி நடவாததால் இவ்வாறு துன்பமடைந்தேன். நீங்களும் வருந்தினீர்கள். இனி, எத்துன்பமும் வராது. பகைவரும் நெருப்பிலே பட்ட பஞ்சுபோலாவர்.' என்று முகமன் கூறினான். கௌசாம்பியை அடுத்த ஓரிடத்தில் அவர்கள் தங்கினார்கள். பாஞ்சாலன் நிலையை அறிந்துவர ஒற்றர்களை அனுப்பினர். அவர்களும் அறிந்துவந்தனர்.

ஆருணிக்கும் உதயணனுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. போரென்றால், அப்பப்பா! எவ்வளவு கொடியது! இருபக்கத்திலும் கணக்கற்ற வீரர்கள் இறந்தனர்! பனங்காய் போலத் தலைகளுருண்டன! இரத்தம் ஆறு போலப் பெருகியது! கடைசியில் ஆருணியை உதயணன் வெட்டிவிழ்த்தினான். நகரமக்களும் மற்ற அரசர்களும் வாழ்த்தச் சிங்காதனத்தில் அமர்ந்து, பதுமையுடன் முடி சூட்டிக்கொண்டான். பிறகு, தனக்குதவிசெய்த வருடகாரனுக்கு உயர்ந்தபொருள்களைப் பரிசாகக் கொடுத்துப் பாராட்டினான். குடிகள் ஆருணியால் அடைந்த அல்லல் அகல, அவர்களுக்கு வேண்டிய நலன்களையெல்லாம் அழகுற அமைத்தான்.

9. உதயணன் வாசவதத்தையையும் பதுமையையும் அடைதல்

பிறகு, உதயணன் தன்னை உஞ்சையிலிருந்து சுமந்துவந்த பத்திராவதி என்னும் யானையின் எலும்புகளைக் கொண்டுவரச்செய்து ஓரிடத்திலே புதைத்துக் கவின் மிகுந்த ஒரு கட்டடம் கட்டி அதற்குப் பத்திராபதி என்றே பெயர் வைத்தான். அந்த யானை விழுந்த இடத்தில் ஒரு சத்திரங் கட்டி, வழிப்போக்கர்களுக்கு உணவளிக்கும்படி நியமித்தான்.

ஒருநாளிரவு பதுமாவதியுடன் உதயணன் மேல் மாடியில் சாளரத்தைத் திறந்துவைத்துக்கொண்டு பேசிக்கொண்டிருந்தான். அப்போது இனிய யாழிசையொன்று அவன் காதில் விழுந்தது. அந்த இசை அவனுடைய யாழாகிய கோடபதியின் இசையைப் போன்று இருந்ததால், வயந்தகனை அனுப்பிப் பார்த்து வரச்சொன்னான். வயந்தகன் அரண்மனையின் எதிரே உள்ள வீட்டில் ஓரந்தணன் யாழ் வாசிப்பதைக் கண்டு, ‘இந்த யாழ் உனக்குக் கிடைத்தது எப்படி?’ என்று வினவினன். அவன், ‘நான் உஞ்சையிலிருந்து வரும் போது ஒரு மூங்கிற் புதரில் இதைக் கண்டேன்’ என்றான். அவனை யாழுடன் அழைத்துவந்து உதயணனிடம் விட்டான். உதயணன் அதனைக் கண்டவுடன் அடக்க முடியாத ஆவலுடன் பெற்றுக்கொண்டு, அந்த அந்தணனுக்கு உயர்ந்த அணிகலன்களையும் பொருள்களையும் ஓரூரையும் அளித்து, இந்நகரத்திலேயே இருக்கவேண்டும் என்று கூறி அனுப்பினன். ‘தந்த தெய்வம் தானே தரும்’ என்று கோடபதியை அவன் அடைந்தது பெருவியப்பன்றோ? பிறகு அந்த யாழைச் செப்பஞ் செய்து

சிறிது வாசித்தவுடன் வாசவதத்தையின் நினைவு வந்தது. ஆகையால், மனங்கலங்கி; 'வாசவதத்தையே! இந்த யாழை வந்து வாசிப்பாயாக' என்று வாய்விட்டுக் கூவி அழுதான். பிறகு, அவள் நினைவாகவே யிருந்தான்.

இவ்வாறிருக்கையில், அங்கே இராசகிரியநகரத்தில் தருசகன், 'உருமண்ணுவாவைச் சிறையினின்றும் விடுவித்தால், என்னிடம் சிறைப்பட்டிருக்கும் அரசர்களை விடுவிப்பேன்' என்று பகையரசர்கட்கு அறிவித்தான் அவ்வாறே, அவர்கள் உருமண்ணுவாவை விடுவித்தனர். தருசகனும் சிறைப்பட்ட அரசர்களை விடுவித்தான். அப்போது, யூகி அனுப்பிய தூதன் ஒருவன் உருமண்ணுவாவைக் கண்டு ஓர் ஓலையை அளித்தான். அதில், 'நாம் நினைத்தவை முடிந்ததால் இனி வாசவதத்தையை உதயணனிடம் ஒப்புவித்தல் வேண்டும்' என்று எழுதியிருந்தது. உருமண்ணுவா அதைக் கொண்டுவந்து கொடுத்த தூதனாகிய சாதகன் என்னுங் குயவனுடன் யூகி தங்கியிருக்கும் புண்டரமென்னும் நகரத்தை அடைந்தான்.

அங்கே, உருமண்ணுவா, யூகியுடன் தாங்கள் பிரிந்ததிலிருந்து நடந்தவெல்லாம் பேசிப் பேசி மகிழ்ந்தான். யூகி, உருமண்ணுவா, வாசவதத்தை, சாங்கியத்தாய் ஆகியோர் அங்கிருந்து புறப்பட்டுக் கௌசாம்பியை அடைந்து, மதுகாம்பிரம் என்னும் சோலையில் தங்கினார்கள். உருமண்ணுவா மற்ற மூவரையும் அங்கேயே இருத்திவிட்டுத் தான் மட்டும் அரண்மனையை அடைந்து, உதயணனைக் கண்டான். உதயணன் பெருங் களிப்புடன் அவனை வரவேற்று, அவன் சிறைப்பட்டது முதல் நடந்தவற்றைக் கூறக்கேட்டு மகிழ்ந்தான். பிறகு,

உதயணன் வாசவதத்தையின் நினைவாகவே இருக்கக் கண்ட உருமண்ணுவா அவனுக்குத் தேறுதல் கூறி, 'முன்பு இராசகிரிய நகரத்திற் கண்ட பெரியோர் மருகாம்பிரம் என்னும் சோலையிலே தங்கியிருக்கிறார். நீ வாசவதத்தையை மீண்டும் பெறவேண்டுமாயின் சில நாட்கள் தனியே நோன்பு நோற்கவேண்டும் என்றார்' என்றான்.

உதயணன் இழந்த உயிரைப் பெற்றவன்போல மகிழ்ந்து, அவ்வாறே தனியே ஓர் அறையில் கோடபதியுடன் நோன்புநோற்று வந்தான். உருமண்ணுவா வாசவதத்தையிடம் சென்று, உதயணனுக்கு அவளிடம் இருக்கும் அன்பைக் காணவேண்டுமாயின் ஓரிரவு சென்று பார்க்கலாம் என்றான். அவள் சிவிகையிலேறி அரண்மனையை அடைந்தாள். உதயணன் துயிலும் அறையைக் கண்டாள். உதயணன் வாசவதத்தையின் நினைவாகவே, 'வாசவதத்தையே! என்னை மறந்தாயோ? இதோ உன் வீணை!' என்று அடிக்கடிப் பிதற்றிக் கொண்டு தூங்கினான். இதைக் கண்ட வாசவதத்தையின் உள்ளம் அன்பினால் உருகியது. அருகே சென்று அமர்ந்து. கோடபதியை எடுத்து வாசித்தாள். அந்த ஓசை உதயணன் காதில் தேன்போலப் பாயவே, 'வாசவதத்தையே! வந்தனையோ? நெருப்பில் விழுந்திறந்ததும் இப்படியோ? உன் ஆபரணங்கள் எங்கே?' என்று அன்புடன் கூறி அவளைத் தடவிக்கொடுத்து விட்டு மறுபடியும் தூங்கிவிட்டான். அப்போது வயந்தகன் அங்கே வந்து, 'தாங்கள் யூகியுடன் நாளைக்குத்தான் இவரைக் காணவேண்டும். அன்பை விளக்கவே இப்போது அழைத்துவந்தோம்' என்று கூறித் திருப்பவும் அப்பொழிலுக்கே அழைத்துச் சென்றான்.

அவள் சென்ற சிறிது நேரத்திற்குள், உதயணன் மறுபடியும் விழித்துக்கொண்டான். வாசவதத்தையைக் காணவில்லை. நாம்கண்டது கனவுதானே என்றெண்ணித் துக்கித்தான் வயந்தகன் அவனிடம் சென்று, 'ஏன் வருந்துகிறாய்?' என்றான். அவன், 'வாசவதத்தையைக் கண்டேன். திடீரென்று மறைந்துவிட்டாள்' என்றான். 'அது கனவு. கனவிற் கண்டதை நனவில் அடைவது முடியுமா?' என்று நகைத்துத் தேற்றினான். பொழுதும் விடிந்தது.

விடிந்த பிறகு வயந்தகன், 'மதுகாம்பிரம் என்னும் பொழிலுக்குச் சென்று அப் பெரியாரைக் காண்போம்' என்று உதயணனை அழைத்துச் சென்றான். முதலில் யூகியிருக்கும் அறையை அடைந்தனர். பெரியாருக்குப் பதிலாக யூகியைக்கண்ட உதயணன் திகைத்தான். தான் காண்பது கனவோ என்று மலைத்தான். பிறகு, அவன் மார்பிலுள்ள தழும்பினால் யூகியே என் றறிந்து பரபரப்புடன் தழுவிக்கொண்டான். யூகியும் அவனை வணங்கி, 'நீ அரசாட்சியைப் பெறவே இவ்வாறு மறைந்தேன்; வாசவதத்தையையும் பிரித்தேன்' என்று கூறினான். உதயணன் அவனுடைய சூழ்ச்சிக்கு வியந்து மெச்சி, 'இனியும் நீ பிரிந்தால் இறப்பேன்' என்று கூறி வாசவதத்தையைக் காண விரும்பினான். மற்றோர் அறையில் அவர்களிருப்பதாகக் கூறி, வயந்தகன் அழைத்துச் சென்றான். அங்கே வாசவதத்தையும் சாங் கியத்தாயும் இருந்தார்கள். வாசவதத்தை உதயணன் திருவடியில் விழுந்து வணங்கித் 'தங்கள் தோழர்களின் சூழ்ச்சிக் கிணங்கிப் பிரிந்தேன். தங்களுக்குப் பெருந் துன்பத்தை உண்டாக்கிவிட்டேன்: மன்னிக்கவேண்டும். என்று கூறினாள். அவளை உதயணன் தழுவியெடுத்து,

அன்பு மொழிகள் கூறினன். சாங்கியத்தாய்க்கும் முகமன் கூறினன்.

அதன்பின் உதயணன் வாசவத்தத்தையை வந்து காணும்படி பதுமைக்குச் சொல்லியனுப்பினன். வாசவதத்தையும் யூகியும் வந்து விட்டதை முரசறைந்து நகரத்தார்க்கு அறிவிக்கச் செய்தான். நகரத்தார் தாயைக்காணும் கன்றெனமகிழ்ந்து நகரை அலங்கரித்தனர். பதுமை தனியே வாசவதத்தை இருக்கும் பொழுது வந்து கண்டு வணங்கினள். வாசவதத்தை அன்புடன் அணைத்துக்கொண்டு வாழ்த்தினள். இருவரும் ஒரு காம்பில் மலர்ந்த இரு மலர்களென விளங்கினர். பின்னர், உதயணன், யூகி, வாசவதத்தை, பதுமை ஆகிய நால்வரும் யானைகளின் மீது ஏறி நகர் வலம் வந்து அரண்மனையை அடைந்தனர்.

அதன்பின் உதயணன் தன் தம்பியர்க்கும் தோழர்க்கும் வேண்டிய சிறப்புக்களைச்செய்தான். தன் அன்னையாகிய மிருகாவதிக்கு மிகுந்த வருமானமுடைய நாடொன்றைத் தானதருமங்களைச் செய்துகொள்ளும்படி பணிந்து கொடுத்தான். மனைவியரிருவர்க்கும் அரண்மனை வேலைக்காரிகளையும் பாஞ்சாலனிடமிருந்து கிடைத்த வேலைக்காரிகளையும் இரண்டு பங்காக்கிக் கொடுத்தான். இவன் அரசாட்சி பெற்றுச் சிறப்படைந்திருப்பதை யறிந்து மகிழ்ந்து பிரச்சோதனன் அனுப்பிய வரிசைகளை யேற்றுக்கொண்டு தானும் அவ்வாறே சிறந்த பொருள்களை அனுப்பினன்.

10. கோசலன் மகள் வாசவதத்தை மணம்

அக்காலத்திற் பெண்களே பந்து விளையாடினர். ஆடவர்கள் சிலம்பம், மற்போர், வேட்டை முதலான விளையாட்டுக்களையே விளையாடினர். உதயணன் தேவிமார் இருவருடைய தோழிகளிலும் பந்து விளையாடுவதில் தேர்ச்சியுற்ற பெண்கள் பலயிருந்தனர். அரசனில்லாதபோது அரண்மனை முற்றத்திலே பந்து விளையாட்டைப் பார்க்க இருவரும் விரும்பினர். இதை வயந்தகன் அறிந்து உதயணனிடம் கூறினன். உதயணன் தானும் அவ் விளையாட்டைப் பார்க்க விரும்பினான். ஆகவே, வேட்டைக்குப் போவதாகப் போக்குக் காட்டி அரண்மனையிலேயே தங்கிவிட்டான். அரசன் வேட்டைக்குப் போய்விட்டானென்று நம்பிப் பதுமையும், வாசவதத்தையும் பந்து விளையாட்டுக்கு ஏற்பாடு செய்தனர். அரசன் பெண் வடிவத்துடன் தோழிகளின் கும்பலிலே வந்திருந்தான்.

பந்து விளையாட்டுத் தொடங்கியது. இரு பக்கத்துத் தோழிகளும் முதலிற் சமமாகவே விளையாடினர். ஆனால், பதுமையின் தோழியாகிய ஆரியை என்பவள் முடிவில் மிகச் சிறப்பாக ஆடினாள். வாசவதத்தையின் தோழிகளில் எவரும் அவளோடு போட்டியிட முடியாமல் வெட்கப்பட்டனர். இதையறிந்த வாசவதத்தை நாணத்துடன் தன் தோழிகளைக் கடைக்கண்ணாற் பார்த்தாள். அப்போது, பாஞ்சால அரசனிடமிருந்து சிறை பிடிக்கப்பட்ட பெண்களில் அழகிற் சிறந்த மானனிகை யென்பவள் வந்து ஆரியை ஆடியதை விட மிகச்சிறப்பாக ஆடினாள். ஆரியை மூவாயிரங்கை அடித்தாள். மானனிகை எண்ணாயிரங்கை அடித்தாள்.

பதுமையும் வாசதைத்தையும் வியந்தனர். பந்து விளையாட்டு முடிந்தது.

உதயணன் மானனிகையின் அழகிலும் பந்து விளையாட்டிலும் ஈடுபட்டான். தன் அறையில் அமர்ந்து தன் தேவிமார் இருவருரையும் வரவழைத்தான். அவர்கள் தங்கள் தோழிகளுடன் வந்தனர். அந்தத் தோழிப் பெண்களையெல்லாம் உற்று நோக்கிய உதயணன் மானனிகையைக் கண்டுபிடித்து அவள் வரலாற்றைக் கேட்டான். அவள், "நான் கோசல தேசத்தரசனுடைய பெருந்தேவி வசுந்தரியின் தோழி. பாஞ்சாலன் எங்கள் அரசனை வென்றபோது என்னையும் சிறைபிடித்துத் தன் தேவிக்குப் பணிப் பெண்ணாக்கினன். அவளுக்கு நான் வண்ணமகளாக இருந்தேன்" என்றாள். அவள் பேச்சிலே துக்கமும் கலந்திருந்தது. கண்களிலிருந்தும் நீர் பெருகியது.

உதயணன் அவளை அன்புடன், 'நீ வருந்தாதே; வாசவதத்தைக்கு வண்ணமகளாக இரு. அவளை நன்றாக அலங்காரம் செய்வது உன் வேலை. உனக்கு எவ்விதக் குறையுமின்றி வாசவதத்தை பார்த்துக் கொள்வாள்' என்றான். வாசவதத்தையும் மானனிகையை அன்புடன் ஏற்றுக்கொண்டாள். அன்று முதல் வாசவதத்தையை அலங்கரித்து உதயணனிடம் அனுப்பி வந்தாள்.

ஒருநாள், உதயணன் வாசவதத்தையைப் பார்த்து, "இன்னும் நன்றாக அலங்காரம் செய்யத் தெரியவில்லை. நான் அலங்காரம் செய்கிறேன்" என்றான். பிறகு, வாசவதத்தையை வேறு வகையில் அழகாகப் புனைந்தான். மானனிகைக்கு யவன மொழி தெரியுமென்று கேட்டிருந்தானாகையால், வாசவதத்தையின் நெற்றியிலே,

'நான் உன்னை விரும்புகிறேன்' என்று எழுதி அனுப்பினான். மானனிகை அதைப் படித்துப் பார்த்து, 'என்னைத் தாங்கள் விரும்புவது தகாது' என்று எழுதி அனுப்பினாள். அவன், 'நீ ஒப்புக்கொள்ளா விட்டால் நான் இறந்து விடுவேன்' என்று எழுதி அனுப்பினான். அவள், 'கூத்துப்பள்ளிக்கு வந்தருள்க' என்று எழுதியனுப்பினாள். இவ்வாறு வாசவதத்தை இருவருக்கும் ஓலையாகப் பயன்பட்டாள்.

அன்றைய இரவு, பதுமையிடம், 'நான் வாசவதத்தையை நாடிச்செல்கிறேன்' என்றும், வாசவதத்தையிடம், 'பதுமையைக் காணப்போகிறேன்' என்றும் கூறிக் கூத்துப்பள்ளிக்குப் போனான். வாசவதத்தை ஐயமுற்றுக் காஞ்சனமாலையை வேவுபார்க்கும்படி சொல்லியனுப்பினாள். அவளும் மறைந்து சென்று பதுங்கியிருந்தாள். கூத்துப்பள்ளியில் மானனிகையை உதயணன் கண்டு மகிழ்ந்தான். அவர்களிருவரும் ஒருவர்க்கொருவர் எழுதியனுப்பிய மொழிகளைக்கூறி வாசவதத்தை ஏமாந்ததைக்குறித்து நகைத்தனர். பிறகு, ஒவ்வொருநாளும் அங்கே அந்நேரத்தில் வரவேண்டுமென்று கூறித் தன்சிறுவிரல் மோதிரத்தை அவளுக்குக் கொடுத்துவிட்டுப் போனான். இதனை காஞ்சனமாலை சென்று வாசவதத்தையிடங் கூறினாள்.

மறுநாட்காலையில், வாசவதத்தை உதயணனைக் கண்டு வணங்கி, நேற்றிரவு நான் கனவொன்று கண்டேன். தாங்கள் எங்களிருவருக்குந் தெரியாமல் யாரோ ஒரு பெண்ணிடம் பேசிக்கொண்டிருந்தீர்கள். அப்பேச்சிலே எனக்குத் தெரியாமல் என் நெற்றியிலே ஒருவர்க்கொருவர் எழுதியனுப்பிய வாசகங்களையும் கூறிக்கொண்டீர்கள். அதன்பிறகு, தங்கள் மோதிர

மொன்றையும் அளித்தீர்கள்' என்ருள். உதயணன் 'என் மனத்திலேயும் இல்லாததை நீ கூறினுய்' என்ருன். 'நான்கண்ட கனவு தீயது. ஆகையால், அதை பிறரிடங் கூறினுல் தீமை போகுமென்று தங்களிடம் கூறி னேன்' என்று வாசவதத்தை கூறிவிட்டுப் போய் விட்டாள். அரசன் அரசியை ஏமாற்றிவிட்டோமென்று மகிழ்ந்தான். இரவு வந்தது.

வாசவதத்தை மானனீகையைச் சிறைப்படுத்தி விட்டு,மற்றவர் அறியாதவண்ணம் காஞ்சனமாலையுடன் கூத்துப்பள்ளியிலே காத்திருந்தாள். உதயணன் மான னீகை யென்றே எண்ணி, அன்று வாசவதத்தை கண்ட கனவைக்கூறினுன். அவள் ஒன்றும் உரையாமல் இருக்கவே, 'நீ அரசுவேண்டினும் அளிப்பேன். மானனீ கையே!' என்ருன். வாசவதத்தை கோபநகை நகைத்து, 'நீங்கள் கூறிய மானனீகை யல்லேன். நான் வாசவ தத்தை' என்று கூறினுள். அரசன் அஞ்சி ஓடிப் போயினன். வாசவதத்தையும் காஞ்சனையுடன் தன் அந்தப்புறம் போனுள்.

காலையில் வாசவதத்தை மானனீகையை இழுத்து வரச்செய்து, அவளை ஒரு தூணுடன் சேர்த்துக் கட்டி விட்டு, 'நேற்றிரவு கூத்துப்பள்ளியில் அரசனோடு பேசியதைக் கூறு' என்று கேட்டாள். அவள் நடுங்கிய வளாக ஒன்றுஞ் சொல்லாமல் இருந்தாள். உடனே அரசி ஒரு தோழியைக், 'கத்தரிக்கோல் கொண்டுவந்து இவள் கூந்தலைக் கத்தரித்து விடு' என்று கட்டளை யிட்டாள். இதை அறிந்த உதயணன், 'அவள் கூந்தலில் ஒருமயிர் நீங்கினும் என் உயிர்போம்' என்று வயந்தக னிடம் கூறினுன். வயந்தகன், 'நான் ஏழு நாழிகையளவு

மட்டும் தடுக்கிறேன். அதன் பிறகு தங்கள் ஆற்றல், என்று விரைந்து சென்ருன்.

சென்ற வயந்தகன் வாசவத்தையை வணங்கி, 'அரசர் எங்கே?' என்ருன் தோழிகளில் ஒருத்தி, 'இப்போது அரசிக்குக் கோபம். ஆகையாற் போய்விடுங்கள், என்ருள். இவன் நடுங்கி, 'அரசியாருடைய கோபத்திற்குக் காரணம் என்ன?' என்ருன். வாசவதத்தை காரணத்தைக் கூறிவிட்டுத் தோழியை, 'மானனீகையின் கூந்தலைக் குறை' என்ருள். வயந்தகன், 'நான் கத்தரிக்கிறேன்' என்று கத்தரிக்கோலை வாங்கிக்கொண்டு, கத்தரிக்கோலின் இலக்கணங்களைக் கூறிக்கொண்டே காலங் கடத்திஞன். அவனுக்குப்பின் யூகி, பித்தன்போல வேடம்பூண்டு வந்து வேடிக்கை செய்துகொண்டிருந்தான். வாசவதத்தை வேடிக்கையிலே ஏழு நாழிகை தாமதித்தாள்.

இப்படியிருக்கையில், கோசல நாட்டரசன் கொடுத்தனுப்பியதாக ஒரு தூதுவன் ஓலையொன்றைக் கொண்டுவந்து, உதயணனிடம் கொடுத்தான். உதயணன் இது வாசவதத்தைக்கு உரியது என்பதை அறிந்து, தக்க சமயத்தில் வந்தது என்று, மகிழ்ந்து கொடுத்தனுப்பிஞன். வாசவதத்தை அதைப்படித்தாள். அதில், மானனீகை யென்ற பெயருடன் அங்கே வந்திருப்பவள் வாசவதத்தையின் சிற்றன்னையின் மகளாகிய வாசவதத்தை யென்றும் அவளை அன்புடன் பார்த்துக் கொள்ளவேண்டு மென்றும் குறிப்பிட்டிருந்தது. கோசலத்தரசன் மனைவி வாசவதத்தையின் சிற்றன்னை. ஆகவே, மானனீகை வாசவதத்தையின் தங்கையென்ருயிற்று.

இவ்வாறு உண்மையுணர்ந்த வாசவதத்தை மான னீகையின் கட்டை அவிழ்த்துவிட்டு, அன்புடன் தழுவிக் கொண்டு, பாஞ்சாலத்தரசனால் அவள் சிறைப்பட்டது முதல் அன்றுவரை அடைந்த துன்பத்திற்கு வருந்திக் கண்ணீர் வடித்தாள். பிறகு, அவளை அலங்காரம் செய்து, நல்ல நாளிலே உதயணனுக்கு மணம் புரிந்து வைத்தாள். மூவரும் அன்றுமுதல் ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

11. விரிசிகை மணம்

ஒருநாள், உதயணன் சபையிலே வீற்றிருக்கும் போது ஒரு முனிவர் வந்தார். அவரை வணங்கி, வர வேற்று, இருக்கையிலே அமர வேண்டினான். அவர் அமர்ந்து, 'அரசே! நீ முன்னொருநாள், இலாவாணநகரின் புறத்திலே உள்ள ஒரு சோலையில் இருக்கும்போது, விரிசிகை என்ற பெண் வந்தாள். அவள் கொண்டுவந்த மலர்களை மாலையாகக்கட்டி அவள் கூந்தலிலே அணிந் தாய்; கழுத்திலும் இட்டாய். அவள் என் மகள். நான் வெள்ளியங்கிரியிலுள்ள மந்தர அரசன். என் மனைவி யோடும் விரிசிகையென்னும் சிறுமியோடும் அர சாட்சியை என் மகனிடம் ஒப்பித்துவிட்டு அங்கே வந்து தவம் புரிந்தேன். நீ அன்று சூட்டிய மாலையுடன் இன் றும் அவள் உன்னையே அடையத் தவம் புரிகிறாள். இப்போது மணப்பருவம் அடைந்திருக்கிறாள். நீ அவளை மணம் புரிவது கடமை" என்று கூறிச்சென்றார்.

உதயணன் அவர் மொழிக்குக் கட்டுப்பட்டு, வாசவ தத்தை முதலியோருடைய அனுமதியைப்பெற்று, விரி சிகையை வரவழைத்து மணம் புரிந்துகொண்டான். பிறகு, யாவரும் ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

இக்கதையால் உணரும் நீதிகள் :—

1. சிறந்த கலையறிவும் நற்குணங்களும் உடையோர் பகைவரா லும் மேன்மை பெறுவார்கள்.

இதை உதயணன் மூலம் அறிகிறோம்.

2. நண்பர்களுக்கு நேர்ந்த இடையூறுகளைப் போக்குவதும், நண்பர்கள் தவறு செய்தால் அதனை நீக்கிப் பகைவர்கள்போலத் துன்பத்தை யுண்டாக்கியாவது அதிலிருந்து மீட்பதும் நண்பர் கடமை.

இவற்றை யூகி உணர்த்துகிறான்.

தேர்வுப் பயிற்சிகள் ;—

I. இருபது வரிகளுக்கு மேற்படாமல் இரண்டு பத்திக ளாக எழுது :—

1. உதயணன் பிறப்பு. 2. உதயணன் சிறைப்பட்டது. 3. நளகிரியை உதயணன் அடக்கியது. 4. வாசவதத்தையும் உதயணனும் காதலித்தல். 5. உதயணன் வாசவதத்தையைக் கைக்கொண்டு சயந்தி நகரம் அடைந்தது. 6. வாசவதத்தையின் பிரிவு. 7. பதுமை மணம். 8. மகதத்தரசன் நட்பு. 9. உதயணன் பகைவரை வென் றது. 10, உதயணன் வாசவதத்தையைத் திரும்ப அடைதல். 11. கோசலத்தரசன் மகள் மணம். 12. யூகியின் சூழ்ச்சிகள்.

II. பத்து வரியிற் குறிப்புக் கொடு ;—

கோபதி, தேய்வயானை, நளகிரி, பத்திராபதி, யூகி, வயந்தகன், உருமண்ணுவா, சாதகன், இசைச்சன், சாங்கியத்தாய், காஞ்சனை.

கழகவெளியீடு—௫௦௯

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.
THIRUNELVELI & MADRAS - 1.

விலை அணா 10.

அப்பர் அச்சகம் சென்னை 1.